தமிழ னென்று சொல்லடா
தலைநி மிர்ந்து நில்லடா

வாழிய செந்தமிழ்! வாழ்கநற் றமிழர்!
வாழிய பாரத மணித்திரு நாடு!

இளந்தமிழன்

மலர் 5 ஆகஸ்டு 1991 இதழ் 1

ஐந்தாவதாண்டில் இளந்தமிழன்

தமிழ்ப் பெருமக்களுக்கு இளந்தமிழனின் வேண்டுகோள்.

இளந்தமிழன் ஐந்தாவதாண்டில் அடி எடுத்து வைக்கிறது.

இளந்தமிழன் இதழ் தொடர்ந்து நன்முறையில் வெளிவர வேண்டும் என்று கடிதம் மூலமும் நேரிடையாகவும் வற்புறுத்தி வரும் ஆர்வலர்களுக்கு எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

தமிழ் நாட்டில் இலக்கிய இதழ்கள் நடத்துவது எளிதான காரியமல்ல என்பது எல்லாரும் அறிந்த உண்மைதான்! அந்த வகையில் பெரும் இழப்புக்களுக்கிடையில் இளந்தமிழன் வெளிவருகிறது என்பதை மிகுந்த கவலையுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

வழக்கம் போல், இளந்தமிழன், பொழுது போக்கு இதழாக இல்லாமல், பொழுதை ஒதுக்கும் இதழாக — அனைவராலும் பாதுகாக்கப்படும் இதழாகவே — தொடர்ந்து வெளி வரும். சில இதழ்கள் குறைபட நின்றாலும் இளந்

தமிழன் தொடர்ந்து வெளிவரும் என்பதை உறுதியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

இளந்தமிழன் இதழ் மிகக் குறைவான எண்ணிக்கையுள்ள சந்தாதாரர்களைக் கொண்டிருந்தாலும் ஆயிரத்து நூறு பேருக்கு மேல், தொடங்கிய காலம் முதல் இதுவரை, இலவசமாகவே அனுப்பி வைத்துள்ளோம் என்னும் கணக்கையும் தமிழ் வாசகர்களின் கவனத்துக்குக் கொண்டு வருகிறோம்.

தமிழ் நாட்டில் எத்தகையதோர் நற்பணிக்கும் ஆயிரம் பேராவது கை கொடுக்க வேண்டும் என்பதே நமது வேண்டுகோள்! அந்த வகையில் புதிய சந்தா ரூபாய் 40 ஐ இளந்தமிழன் இதழுக்கு அனுப்பி வைக்குமாறு தமிழ்ப் பெருமக்களை அன்புடன் வேண்டுகிறோம்.

இளந்தமிழன் இதழுக்குத் தாமே முன் வந்து அன்புடன் சந்தா அனுப்பிய அன்பர்களுக்கும், விளம்பரங்கள் தந்துதவிய பெருமக்களுக்கும் எமது இதய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

வர்த்தகப் பெருமக்களே! விளம்பரங்களைத் தந்துதவுங்கள்! இலக்கிய ஆர்வலர்களே! ஆயுள் சந்தா ரூ. 400 செலுத்தி இளந்தமிழனை வளர்த்து விடுங்கள்! பொருள் வசதி படைத்தோரே! இளந்தமிழனுக்கு பெரு நிதி அளித்து ஆதரவு தாருங்கள் என்று, அன்புடன் தமிழ்ப் பெருமக்களை வேண்டிக் கேட்டுக் கொள்கிறோம்.

ஐந்தாவது ஆண்டில்
அடி எடுத்து வைக்கும்
இளந்தமிழனுக்கு
வாழ்த்துக்கள்

தொலைபேசி எண்:
கடை 2222
வீடு 2411

193681

ஆர். ரமநாதன்

ஸ்ரீ நடராஜ விலாஸ் ஜுவல்லரி ஹால்

26-28 கடைத்தெரு,
சிதம்பரம்-608 001

வள்ளலார் வசனம்

(தம் கன்றை இழந்ததாய்ப்பசு திருவாரூரை ஆண்ட மன்னன் மனுச்சோழனின் ஆராய்ச்சி மணியைத் தன் கொம்பினால் மிகுந்த விசையோடும், வலியோடும் அடித்தசைத்து தம் வழக்கை அரசனிடம் முறையீடு செய்து கொண்டது.

பலநாள் தவமிருந்து 'புத்திரப் பேறு பெற்றுப் புனிதனானோம்' என்று பூரித்திருந்த அரசன் இளங்கன்று எதிர்வரவும் கண்கெட்டுக் கருத்தழிந்தவன் போல் 'தேரை நடத்தித் தீராப் பழிப்பூண்டானே! ஐயோ, இவன் என் செங்கோலைப் பிடிக்கத் தக்க செல்வப் பிள்ளையாகாமல் தென்னம் பிள்ளையானானே! 'இவன் கல்வியறிவு உள்ளவனாயிருந்தும் அறிவழிந்து அரசன் பிள்ளையாகாமற் அணிற்பிள்ளையானானே' எனப் புலம்பி, 'மாதா பிதாக்கள் செய்தது மக்களுக்கு' என்னும் பெரியோர் வார்த்தையின்படி நான் செய்த தீவினையே என் புத்திரனுக்கு நேரிட்டதென்று நினைத்து என்னை வெறுத்துக் கொள்ள வேண்டுமென்றாலும் இந்தப் பிறப்பில் என் புத்தியறிந்து ஒரு தீங்கும் செய்ததில்லையே! இப்பிறப்பில் இல்லாவிட்டாலும் முற்பிறப்பிலே இவ்விதமான தீமைகளைச் செய்தேனோ என்று பலவாறு கூறிப் புலம்பித் துயருறுகிறான்.

மன்னன் கூறும் தீமைகள் அனைவராலும் செய்யாமற் ஒதுக்கத் தக்கவையாகும்.

மனுமுறை கண்ட வாசகத்தில், வள்ளலாரின் வசன நடை பல முறைப் படித்து இன்புறத் தக்கதாக அமைந்துள்ளது.—ஆசிரியர்)

நல்லோர் மனத்தை நடுங்கச் செய்தேனோ! வலிய வழக்கிட்டு மானங் கெடுத்தேனோ! தானங் கொடுப்போரைத் தடுத்து நின்றேனோ! கலந்த சினேகரைக் கலகஞ் செய்தேனோ! மனமொத்த நட்புக்கு வஞ்சகஞ் செய்தேனோ! குடிவரி யுயர்த்திக் கொள்ளை கொண்டேனோ' ஏழைகள் வயிறு எரியச் செய்தேனோ! தருமம் பாராது தண்டஞ் செய்தேனோ! மண்ணோரம் பேசி வாழ்வழித்தேனோ! உயிர்க்கொலை செய்வோர்க்கு உபகாரஞ் செய்தேனோ களவு செய்வோர்க்கு உளவு சொன்னேனோ! பொருளை இச்சித்துப் பொய் சொன்னேனோ! ஆசை காட்டி மோசஞ் செய்தேனோ! வரவு போக்கொழிய வழியடைத்தேனோ! வேலையிட்டுக் கூலி குறைத்தேனோ! பசித்தோர் முகத்தைப் பாராதிருந்தேனோ! இரப்போர்க்குப் பிச்சை இல்லையென்றேனோ! கோள் சொல்லிக் குடும்பங் குலைத்தேனோ! நட்டாற்றிற் கையை நழுவ விட்டேனோ! கலங்கியொளித்தோரைக் காட்டிக் கொடுத்தேனோ! கற்பழித்தவளைக் கலந்திருந்தேனோ! காவல் கொண்டிருந்த கன்னியை அழித்தேனோ! கணவன்வழி நிற்போரைக் கற்பழித்தேனோ! கருப்பமழித்துக்

களித்திருந்தேனோ! குருவை வணங்கக் கூசிநின்றேனோ! குருவின் காணிக்கை கொடுக்க மறந்தேனோ! கற்றவர் ;தம்மைக் கடுகடுத்தேனோ!பெரியோர் பாட்டிற் பிழைசொன்னேனோ! பக்ஷியைக் கூண்டில் பதைக்க அடைத்தேனோ! கன்றுக்கும் பாலூட்டாது கட்டிவைத்தேனோ! ஊன் சுவையுண்டு உடல் வளர்த்தேனோ! கல்லும் நெல்லும் க்லந்து விற்றேனோ! அன்புடையவர்க்குத் துன்பஞ் செய்தேனோ! குடிக்கின்ற நீருள்ள குளந்தூர்த்தேனோ! வெய்யிலுக் கொதுங்கும் விருக்ஷ மழித்தேனோ! பகை கொண்டு அயலோர் பயிரழித்தேனோ! பொது மண்டபத்தைப் போயிடித்தேனோ!ஆலயக் கதவை அடைத்து வைத்தேனோ! சிவனடியாரைச் சீறி வைதேனோ! தவஞ் செய்வோரைத் தாழ்வு சொன்னேனோ! சுத்த ஞானிகளைத் தூஷணஞ் செய்தேனோ! தந்தைதாய் மொழியைத் தள்ளி நடந்தேனோ! தெய்வமிகழ்ந்து செருக்கடைந்தேனோ! என்ன பாவம் செய்தேனோ! இன்னதென்றறியேனே!

“ஐயோ! இந்தப் பசுவின் சோர்ந்த முகத்திற் கண்ணீர் ததும்புகின்றதைக் கண்ட என் கண்களை நுங்கு சூன்றெடுப்பது போலப் பிடுங்கி யெறியேனோ!”

★ ★ ★

“ஆ! நான் நீதி தவறாது அரசு செய்கிறேன் என்பதை நினைத்தால் எனக்கே ஏளனமாக விருக்கின்றதே! சேங்கன்றைத் தெருவிற் சிதைக்கவும் ஒருமித்த என் செங்கோலை அளவு கோலென்பேனோ! அஞ்சனக்கோலென்பேனோ! எழுதுகோலென்பேனோ! ஏற்றக்கோலென்பேனோ! கத்தரிக்கோலென்பேனோ! கன்னக்கோலென்பேனோ! குருடன் கோலென்பேனோ! கொடுங்கோலென்பேனோ துடைப்பக்கோலென்பேனோ! அல்லது இன்று இறந்த பசுங்கன்றாகிய பிரேதத்தை புரட்டிச் சுடுகின்ற பிணக்கோலென்பேனோ! என்ன கோலென்று எண்ணுவேன்! இளங்கன்றைக் கொலை செய்யவுஞ் சம்மதித்திருந்த என் ஆக்கினா சக்கரத்தை கிரகச்சக்கரமென்பேனோ! வருஷ சக்கரமென்பேனோ! தண்டசக்கரமென்பேனோ அல்லது இச்சேங்கன்றைசிதைத்த தேர்ச்சக்கரமென்பேனோ! என்ன சக்கரமென் றெண்ணுவேன்! இந்த பசுவின் கன்றுக்கு அபாயம் நேரிடக் காத்திருந்த என் காவலைச் சிறு பெண் காக்கின்ற தினைக் காவலென்பேனோ! குருடன் காக்கின்ற கொல்லைக் காவலென்பேனோ! புல்லாற் செய்த புருடன் காக்கின்ற புன்செய்க் காவலென்பேனோ! வரும்படி யில்லான் காக்கின்ற வாயிற்காவலென்பேனோ! பயிரைக் காக்கவைத்த பண்ணைக் காவலென்பேனோ! வேலை வேண்டிக் காக்கின்ற வெறுங்காவலென்பேனோ! அல்லது இக்கன்றை அடக்கஞ் செய்யக் காத்திருக்கின்ற அரிச்சந்திரன் காவலென்பேனோ! என்ன காவலென்று எண்ணுவேன்! என்ன செய்வேன்! ஐயோ இப்படிப்பட்ட பாவியாகிய என்னை மனுவென்று பேரிட்டழைப்பது காராட்டை வெள்ளாடென்றும்அமங்களவார்த்தை மங்கள வாரமென்றும், நாகப் பாம்பை நல்லபாம்பென்றும் வழங்குகின்ற வழக்கம் போன்றதல்லது உண்மையல்லவே! இனி இப்பசுங்கன்று உயிர்பெற்றெழுந்திருப்பதற்கு உபாயம் என் புத்திரனுயிரையன்றி யென்னுயிரையும் என் மனையாளுயிரையும் என்னரசாட்சியையும், எனக்கு உரித்தாகிய எல்லாப் பொருள்களையுங் கொடுத்து விட்டால் நேரிடுமென்று சொல்வோருண்டானால், இதோ கொடுத்து விடுகிறேன். அவ்வாறு சொல்வோருமில்லையே! இதற்கு நேரிட்ட துக்கமும் எனக்கதனாலுண்டாகிய துயரமும் எப்படி தீருமோ! இப்படி யென்றறியேனே! என்ன செய்வேன்!” என்று பலவிதமாக பரிதபித்திருந்தார்.

வள்ளலார் வரிசை நூல்கள்

திருவருட்பா	7-50
அருட்பெருஞ்ஜோதி அகவல்	4-00
சீவகாருணிய ஒழுக்கம்	5-00
மனுமுறைகண்ட வாசகம்	5.00
திருவருட்பாச் சிந்தனை	35.00
அருட்பிரகாச வள்ளலார்	16-00
திருவருட்பா (கல்வெட்டுப் பாடல்கள்)	4-00
விண்ணப்பங்கள்	5-50
வள்ளலார் வாழ்வியல்	3-00
வள்ளலாரும் திருவள்ளுவரும்	11-50
வள்ளலாரும் திருஞானசம்பந்தரும்	10-00
வள்ளலாரும் நாவுக்கரசரும்	10-00
வள்ளலாரும் மாணிக்கவாசகரும்	10-00
வள்ளலாரும் தாயுமானவரும்	10-00
வள்ளலாரும் பாரதியாரும்	14-00
விஞ்ஞான அருளாளர் வள்ளலார்	20-00
வள்ளுவர் வழியில் வள்ளலார்	10-00
வள்ளலாரும் ராமகிருஷ்ணரும்	15-00

கிடைக்குமிடம் :

மணிவாசகர் நூலகம்

12, மேல சன்னதி, சிதம்பரம்-608001
14, சுங்குராம் தெரு, பாரிமுனை, சென்னை-600001
55, லிங்கிச் செட்டித் தெரு, சென்னை-600001
28, வடக்கு ஆவணி மூல வீதி, மதுரை-625001
3/4, ராஜவீதி, கோயமுத்தூர்-641001
23, கிளைவ்ஸ் கட்டிடம், திருச்சி-620002

சென்னை போன்: 513207   சிதம்பரம் போன்: 7299

எப்போது முடிவு கட்டப் போகிறோம்?

அருட்செல்வர் டாக்டர் நா. மகாலிங்கம்

தமிழ் மொழியின் மீது நாம் காட்டுகிற அன்பு எப்படிப்பட்டது?

வீட்டு மொழியைப்படிக்காமல் வேறு வேறு மொழிகள் படிப்பவர்களைப் போ போ என்று பாரதியார் காறி உமிழ்ந்தார்.

தமிழின் இனிமை பழமை சிறப்புப் பற்றியெல்லாம் வாய் கிழியப் பேசுகிறோம்.

ஆனால் பிஞ்சுக் குழந்தைகளுக்கு தமிழ் சொல்லித் தராமல் ஆங்கிலம் கற்றுத் தருகிறோம். அனா, ஆவுன்னாவுக்கு பதிலாக ஏ.பி.சி.டி என்று தொடங்குகிறோம்.

நமது பேச்சு வழக்கில் ஆங்கில சொல் கலக்காமல் பேசவே முடியவில்லை.

இத்தகைய ஆங்கில மோகம், ஆங்கில வெறி, தமிழ்நாட்டை இருள் போலக் கவ்விக் கொண்டிருக்கிறது.

நமது பேச்சு, நடை, உடை, பாவனை, பழக்க வழக்கம், கல்வி, இசை, இலக்கியம் எல்லாவற்றிலும் தமிழ்நாட்டு மணம் இல்லை.

இந்த மண்ணுக்கே உரியசிறப்பு இயல்புகளைக் கொஞ்சம் கொஞ்சமாக இழந்துவிட்டோம்.

தமிழ் மக்களை இனம் பிரித்துக் காட்டும் சிறப்புத் தகுதியான தமிழ் மொழி— இன்று நமது வாழ்வின் எல்லாத் துறைகளிலும் பின்னுக்குத் தள்ளப்பட்டு விட்டதே! என்ன கோலம் இது?

அரசாங்கப் பள்ளிக் கூடங்களில் கூட தொடக்கம் முதல் ஆங்கிலம் கற்றுக் கொடுக்கப்படுகிறது.

இந்த அவல நிலையை ஒரு புறம் அனுமதித்துக் கொண்டு மறுபுறம் 'பாரதி வாழ்க! பாரதிதாசன் வாழ்க!' என்று பேசுவதால் என்ன பயன்?

தனக்கு ஆங்கிலக் கல்வி உணர்த்திய ஆசிரியர்களைப் 'பொய்யர்' என்கிறார் பாரதியார். தமிழ்மொழியையும், தமிழ்ப் பண்பையும், தமிழ் கலாச் சாரத்தையும் மெல்ல மெல்ல விழுங்கி விட்டது ஆங்கிலம்.

இதனால் நமக்கு ஏற்பட்டுள்ள சீரழிவை மேலும் அதிகப்படுத்துவது போல் போதனா மொழியாக ஆங்கிலம் உயர் மட்டத்தில் இருக்கிறது. அதற்கு நாளுக்கு நாள் பலம் ஊட்டப்படுகிறது ஊக்கம் தரப்படுகிறது.

போலித்தனமான காரணங்களைக் கற்பித்துக் கொண்டு தமிழ் மக்கள் தங்கள் சொந்த மொழியை, தங்கள் தாய்மொழியைப் புறக்கணித்து வருகின்ற அவலத்துக்கு எப்போது முடிவு கட்டப் போகிறோம்? அன்றுதான் பாரதிக்கும் பாரதிதாசனுக்கும் விழா எடுப்பதில் அர்த்தமிருக்க முடியும்.

எனவே பாரதியார் சங்கம் நடத்துகிற இந்த பாரதியார் விழாவானது மக்களின் கவனத்தை தாய்மொழியின் பால் திருப்புவதற்குப் பயன்பட வேண்டும்.

(11—9—90 அன்று சென்னையில் பாரதியார் சங்கம் நடத்திய மகாகவி பாரதி விழாவில்)

மீ. ப. சோமு பரிசு பெற்றார்

சென்னையில் இராணி சீதை ஆச்சிமண்டபத்தில் கடந்த5-8-91 அன்று நடைபெற்ற ராஜா சர் முத்தையாசெட்டியார் 87-ஆவது பிறந்த நாளில் இராஜா அண்ணாமலைச் செட்டியார் அறக்கட்டளை சார்பில் அளிக்கப் பெறும். பரிசுத்தொகை ரூபாய் 50000-ஐ இவ்வாண்டு (1991) பிரபல எழுத்தாளர் மீ. ப. சோமு பெற்றார். இப்பரிசுத் தொகையை அறக்கட்டளையின் சார்பில் ஒய்வு பெற்ற நீதிபதி கோகுல கிருஷ்ணன், அவருக்கு அளித்தார். அண்ணாமலைப் பல்கலைக்கழக இணை வேந்தர் டாக்டர் எம். ஏ. எம். இராமசாமி பொன்னாடை போர்த்திச் சந்தன மாலை அணிவித்தார்.

விழாவில் தமிழக உணவு அமைச்சர் மாண்மிகு க. இராசாராம் கலந்து கொண்டு முத்தையா செட்டியார் பற்றி அரியதோர் சிறப்புரை நிகழ்த்திப் புகழாரம் சூட்டினார்.

பின்னர் தலைமை உரையாற்றிய நீதிபதி கோகுல கிருஷ்ணன் அண்ணாமலைச் செட்டியார், முத்தையா செட்டியார், எம்.ஏ.எம். இராமசாமி ஆகியோரின் கல்விப் பணிகளைப் பாராட்டியதுடன் பரிசு பெற்ற மீ. ப. சோமு அவர்களின் இலக்கியப் பணிகளைப் பாராட்டி கடல் போன்ற அவர் புலமையை வியந்து போற்றினார்.

ஏற்புரையில் மீ. ப. சோமு அவர்கள் ''என்னை எழுத்தாளராக ஆக்கிய கல்கிகிருஷ்ணமூர்த்தி ரசிகமணி டி. கே. சி, ராஜாஜி ஆகிய மும்மூர்த்திகளை நினைவு கூர்ந்து வணங்குகிறேன்'' என்று கூறியது அவர் நன்றி உணர்வினை வெளிப்படுத்தியது.



முத்தையா செட்டியார்

தொடக்கத்தில் டாக்டர் எம். ஏ. எம். இராமசாமி அனைவரையும் வரவேற்றார். அதற்கு முன்னதாக சீர்காழி சிவ சிதம்பரம் கடவுள் வாழ்த்துப் பாடினார். முடிவில், செட்டி நாடு சிமெண்ட் செயல் இயக்குநர் எல். சபாரத்தினம் அனைவருக்கும் நன்றி கூறினார்.

1938ல் பாரதி தங்கப் பதக்கமும், 1939ல் ஆனந்த விகடன் சிறு கதைப் போட்டியில் முதல் பரிசும் 1948ல் இளவேனில் கவிதை நூலுக்குத் தமிழக அரசின் பரிசும், 1961ல் (களாத கானம் என்னும் நூலுக்குத் தமிழக அரசின் சிறுகதை விருதும், 1963ல், அக்கரைச் சீமையிலே என்னும் நூலுக்கு சாகித்ய அக்காடமியின் பரிசும், 1983ல் 'நமது செல்வம்' என்னும் அழகிய சிறந்த கட்டுரை நூலுக்கு எம். ஏ. சி. அறக்கட்டளையில் இராஜா சர் அண்ணாமலைச் செட்டியார் விருது ரூபாய் இருபதாயிரம் பரிசையும் பெற்ற மீ. ப. சோமு தம்முடைய 71-வது வயதில் இப்பரிசைப் பெற்றார் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

தமிழகத்தில் பல்லாயிரம் பிரதிகள் விற்பனையான 'திரு மூலர் தவ மொழி', 'முதல் மூவர்' என்னும் நூல்களை ராஜாஜி அவர்களுடன் இணைந்து மீ. ப. சோமு எழுதினார் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

ஜோதி ஜோதி ஜோதி சுயம்
ஜோதி ஜோதி ஜோதி பரம்
ஜோதி ஜோதி ஜோதி யருள்
ஜோதி ஜோதி ஜோதி சிவம்

வாமஜோதி சோமஜோதி வானஜோதி ஞானஜோதி
மாகஜோதி யோகஜோதி வாதஜோதி நாதஜோதி
ஏமஜோதி வியோமஜோதி யேறுஜோதி வீறுஜோதி
ஏகஜோதி யேகஜோதி யேகஜோதி யேகஜோதி

ஆதிநீதி வேதனே ஆடல்நீடு பாதனே
வாதிஞான போதனே வாழ்கவாழ்க நாதனே.

— திருஅருட்பிரகாச வள்ளலார்.

விளம்பர உதவி:

விளம்பர உதவி

ஏ பி டி பார்சல் சர்வீஸ்

பொருள் போக்குவரத்து சம்பந்தமான
அனைத்து பிரச்னைகளுக்கும் சுலபமான தீர்வு

ஏ பி டி பார்சல் சர்வீஸ்

இருபத்தைந்து ஆண்டுகளாக வணிகப்
பெருமக்களின் நம்பிக்கைக்குரிய தேர்வு

ஏ பி டி பார்சல் சர்வீஸ்

உங்களுக்கு ஏற்றதொரு பார்சல் சர்வீஸ்

ஏ பி டி பார்சல் சர்வீஸ்

எங்களது சேவையை உங்களுக்கும் தொடர
எங்களுக்கு ஓர் வாய்ப்புத் தாரீர்!
குறைந்த கட்டணம். விரைந்த சேவை

ஏ பி டி பார்சல் சர்வீஸ்
[illegible]-15 காளியண்ணராயன் தெரு
ராம் நகர், கோவை - 641 009.

பழ. அதியமான் டாக்டர் பட்டம் பெற்றார்

வ. ரா.

'பாட்டுக்குப் பாரதி; வசனத்துக்கு வ.ரா' என்று கூறுவார்கள். அத்தகைய மறுமலர்ச்சி எழுத்தாளர் முதல்வர் வ. ராவின் (1889-51) அரிய படைப்புகளை மாநிலக் கல்லூரி மாணவர் பழ. அதியமான், பேராசிரியர் டாக்டர் நாகு அவர்களின் சீரிய வழி காட்டுதலின்கீழ் ஆராய்ந்து, இவ்வாண்டின் தொடக்கத்தில் டாக்டர் பட்டம் பெற்றுள்ளார் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம். வ. ரா. நூற்றாண்டு நிறைவு காலத்தில் பழ. அதியமான் டாக்டர் பட்டம் பெற்றுள்ளது இரட்டிப்பு மகிழ்ச்சியைத் தருகிறது.

டாக்டர் பழ. அதியமான் மாணவப் பருவ முதலே ஆய்வில் மனம் தோய்ந்தவராகத் திகழ்ந்து வருகிறார். டாக்டர் பட்டம பெறுகின்ற ஆய்வாளர்களில் பலர் பட்டம் பெற்றதோடு ஆய்வுப் பணி முடிந்து விட்டதாகக் கருதுகிறார்கள். அவ்விதமின்றி பட்டம் பெற்றதற்குப் பிறகும் அவர் மேலும் மேலும் தமிழ் இலக்கிய ஆய்வினைத் துடிப்புடன் மேற்கொண்டு வருகிறார்.

டாக்டர் அதியமானின் வ. ரா. பற்றிய ஆய்வு, நூல் வடிவில் விரைவில் வெளிவரும் என்று எதிர்பார்க்கிறோம்.

வ. ரா. பற்றி ஆய்வு நிகழ்த்திய டாக்டர் அதியமானுக்கும் அவரை நெறிப்படுத்திய டாக்டர் நாகு அவர்களுக்கும் பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

(ஆ-ர்)

பத்திரிகைகளின் இலட்சியம்

பத்திரிகைகளின் இலட்சியம் பொதுநல ஊழியமாகவே இருத்தல் வேண்டும் என்று உணர்ந்தேன். பத்திரிகைகளின் சக்தி அபாரமானது. ஆனால் கரையில்லாத நீர்ப் பெருக்கம் நாட்டையெல்லாம் மூழ்கடித்துப் பயிரைப் பாழாக்குவதுபோல், கட்டுக்கு உட்படாத பேனாவும் அழிவு வேலைக்கே பயன்படுகிறது. கட்டுப்பாடே இல்லாதிருப்பதைவிட வெளியிலிருந்து ஏற்படும் கட்டுப்பாடு தீமை பயப்பதாகும். பத்திரிகைகள் தங்களுக்குத் தாங்களே கட்டுப்பாடு ஏற்படுத்திக் கொள்வதில்தான் நன்மையுண்டு. தற்போது உலகில் உள்ள பத்திரிகைககளில் தேறக்கூடியவை எவ்வளவு? உபயோகமற்ற பத்திரிகைகளை யார் நிறுத்துவது? உபயோகமானவை உபயோகமில்லாதவை என்று முடிவு செய்வது யார்? உலகின் நன்மை தீமைகள் எப்போதும் கலந்திருப்பதுபோல், பயனுள்ள பத்திரிகைகளும், பயனில்லாப் பத்திரிகைகளும் இருக்கவே செய்யும். மனிதன் தன் அறிவினால் ஆராய்ந்து பயனுள்ளதைத் தேர்ந்தெடுத்துக் கொள்ள வேண்டும்.

— காந்தி அடிகள்

முடிந்த வழிகளில் எல்லாம் நன்மை செய்
முடிந்த வகைகளில் எல்லாம் நன்மை செய்
முடிந்த இடங்களில் எல்லாம் நன்மை செய்
முடிந்த நேரங்களில் எல்லாம் நன்மை செய்
முடிந்த மனிதருக்கு எல்லாம் நன்மை செய்

— ஜான் வெஸ்லி

மணிவாசகர் நூலகம் தொகுத்த
"வெற்றி சிந்தனைகள்"

With the Best Compliments From:

GOLD SPOT

LIMCA

THUMS UP

MAAZA

CITRA

&

BISLERI CLUB SODA

Phone : 420755/420440/425150

ஐந்தாவதாண்டில் அடி எடுத்து வைக்கும்
இளந்தமிழனுக்கு நல்வாழ்த்துக்கள்

எங்களிடம் திருமணம் மற்றும் வைபவங்களுக்கு மொத்தமாகவும் சில்லறையாகவும் மளிகைச் சாமான்களும் ஷாப் சாமான்களும் நியாயமான விலையில் கிடைக்கும்.
வாடிக்கையாளர்களுக்கு வீட்டு டெலிவரி உண்டு

தேவி ஸ்டோர்ஸ்

உரிமையாளர் : எம். இராமசாமி
மளிகை ஜெனரல் மர்ச்சண்டு
122A, மேற்கு அவென்யூ, காமராஜர் நகர்
திருவான்மியூர் : : சென்னை-600 041.
தொலைபேசி எண் : 419723

விற்பனையாகிக் கொண்டிருக்கிறது

கவிஞர் சீமானின் புதிய நூல்கள்

பொழுதோன்று விடிந்தது	ரூ. 10
சமுதாய மாற்றம்	ரூ. 7
மனதில் ஓடும் நதிகள்	ரூ. 12
பக்தி பாடல் காசெட்	
முருக தரிசனம்	ரூ. 25

கிடைக்குமிடம் :

சீனிவாசன் பதிப்பகம்

11, சிவகாமி நகர்,
புதுவண்ணை : : சென்னை-600 081

பதிப்புச் செம்மல், பேராசிரியர்

டாக்டர் ச. மெய்யப்பனின் சாதனைகள்

பதிப்புச் செம்மல் தமிழறிஞர் பேராசிரியர், டாக்டர் ச. மெய்யப்பன் அவர்களை அறியாத தமிழ் அன்பர்களே இல்லை.

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில், இன்முகத்துடன் சுறுசுறுப்பாக செயல்பட்ட மாணவராக முப்பதாண்டுகளுக்கு முன் அவரைப் பார்த்தவர்கள், இப்போது பார்க்கும்போது, அவரிடம் எந்த ஒரு மாற்றத்தையும் காண முடியாது. அன்றைக்கு எப்படி நண்பர்களிடமும் தமிழ் ஆர்வலர்களிடமும் கனிவுடன் சிரித்துப் பேசி மகிழ்ந்தாரோ அதே பண்பை இன்றைக்கும் அவர் மேற்கொண்டிருக்கிறார்.

கடந்த முப்பது ஆண்டுகளில் அவர் மகத்தான வளர்ச்சி பெற்றிருக்கிறார். மாணவர்கள் மதித்துப் போற்றும் பல்கலைக் கழகப் பேராசிரியராக-இக்கால இடைக்கால, சங்க கால நூல்களில் ஆழ்ந்த புலமை பெற்ற தமிழறிஞராக-'நூறு ஆண்டுகளில் தமிழ் நூல் பதிப்பு முறை' என்னும் தலைப்பில் ஆய்வு நிகழ்த்தி டாக்டர் பட்டம் பெற்ற தமிழ் ஆராய்ச்சியாளராக- உயர்ந்த கருத்துக்கள் கொண்ட உன்னத நூல்கள் பன்னிரண்டின் ஆசிரியராக- புகழ் வாய்ந்த நானூறு நூல்களின் பதிப்பாளராக- தமிழர்கள் தாய்மொழியின் மூலம் கல்வி பயில்வதை வற்புறுத்திப் போராடும் தளபதியாக- திருக்குறள் இயக்கம், திருமுறை இயக்கம், தமிழிசை இயக்கம் ஆகியவற்றில் முக்கியப் பங்கு கொண்டு செயல் படும் செயல் வீரராக. சிறந்த இறைபக்திகொண்ட ஆன்மீக ஞானியாக-அறப்பணிகள்பல புரியும் அறச் செல்வராக- இளந்தலை முறையினர் உள்ளிட்ட மூத்த தமிழ்ச் சான்றோர்களின் முழு அன்பைப் பெற்ற, மென் தமிழ்ச் சான்றோராக அவரைத் தமிழகம் இன்றைக்குக் கண்டு மகிழ்கிறது.

அவரது "வெற்றி நூல்களை" அறியாத தமிழக மாணவர்களே இல்லை.

கடந்த முப்பதாண்டுகளில் அவர் மெய் மறந்து உழைத்த கடுமையான உழைப்புதான், இத்தகைய ஏற்றமிகு நிலையை அவர் பெறக் காரணமாக அமைந்திருக்கிறது

திரு. மெய்யப்பன் சிதம்பரம், சென்னை, மதுரை, திருச்சி, கோவை முதலிய ஊர்களில் தம்முடைய நிறுவனங்களில் எத்த

ணையோ பேருக்கு வேலைவாய்ப்புகள் தந்து, நூற்றுக்கணக்கான குடும்பங்களை வாழ வைக்கும் புரவலராக விளங்குகிறார்.

சிதம்பரம், சென்னை,மதுரை, ஆகிய ஊர்களில் அவர் இருக்கும் போது அதிகாலையில் எழுந்து முறையே நடராசரையும், கற்பகாம்பாளையும், மீனாட்சியையும் வீதி உலா வந்து தரிசிப்பதை அவர் தம் கடமையாகக் கொண்டிருக்கிறார்.

நண்பர்களின் திருமணங்கள், தமிழறிஞர்களின் மணி விழாக்கள் மற்றும் மங்கல நிகழ்ச்சிகள் நடைபெறும்போது தம் உதவியாளர்களுடன் தவறாமல் உரிய நேரத்தில் வருகை தந்து எளிய தமிழ்த் தொண்டராக விளங்கி, வெற்றி சிந்தனை வரிசைகள், புதிய ஆத்திச்சூடி தொகுப்புகள், தேர்ந்தெடுக்கப்பட்ட மாணிக்கக் குறள்கள் ஆகியவற்றை மிக உயர்ந்த முறையில் கையடக்கப் பதிப்பாக அச்சிட்டு இலவசமாக அனைவருக்கும் வழங்கி, விழாச் சிறப்பை முழுமையாக்குவதை அவர் வழக்கமாகக் கொண்டிருக்கிறார்.

ஒருமுறை திராவிட முன்னேற்றக் கழகத்தின் தமிழ்ப்பணிகள் ஐம்பதைத் தேர்ந்தெடுத்து, அச்சிட்டு, இலவசமாக அனைவருக்கும் வழங்கினார். தி. மு. கழகப் பிரமுகர்களே அவ்விதம் செய்ததில்லை. அந்த வகையில் கட்சிப் பிரசாரத்தை ஆக்க பூர்வமான வழியில் செய்ய அவர்களுக்கு அவர் வழி காட்டியுள்ளார்.

—இத்தகைய பணிகள் காரணமாக, அவரை வாழ்த்தாத தமிழ் நெஞ்சங்கள் இல்லை.

கல்வியாலும், செல்வத்தாலும் செல்வாக்காலும் அவர் எவ்வளவோ வளர்ந்து உயர்ந்து விட்ட இந்த நிலையிலும் கையில் சிறு பையுடன்,வெள்ளை வேட்டி சட்டை அணிந்த எளிய கோலத்துடன் கள்ளங் கபடமற்ற கண்ணியமான நாட்டுப்புற விவசாயியைப் போல், நகர்ப்புறத்தில் அவர் சாதாரணமாக நடந்து செல்வதைப் பார்த்து அவரை முழுமையாக அறிந்தவர்கள், பெரிதும் வியப்படைகிறார்கள்!

அவர் வாழ்வது சிதம்பரத்தில் தானென்றாலும், சென்னையில் நடைபெறும் இலக்கிய தொடர்பான புத்தக வெளியீட்டு விழாக்கள் அனைத்திலும் பங்கு பெற, அவர் தவறுவதில்லை. அது போலவே, சிறந்த இலக்கிய விழாக்கள் அனைத்திலும் கலந்து கொள்கிறார்.

எப்போதும், எத்தகைய உயர்ந்த நூல்களை வெளியிட்டுத் தமிழுக்குச் சிறப்புச் சேர்க்கலாம் என்பதையே சிந்தனையாகக் கொண்டவராக அவர் திகழ்கிறார்.

திருக்கோயில் வரிசை, உலக நூல் வரிசை, அகராதிகள் வரிசை வள்ளலார் வரிசை என ஒன்பதுக்கும் மேற்பட்ட வரிசை நூல்களை அவர் வெளியிட்டுள்ளார். இந்நூல்களின் தலைப்பையும், அத்தலைப்பின் 'கீழ்' வெளியிட்டுள்ள நூல்களையும் பார்த்தாலே இவருடைய நுண்ணிய அறிவு எவருக்கும் எளிதாகப் புலப்படும்.

மணிவாசகர் நூலகம் வெளியிட்டுள்ள 35 நூல்கள், தமிழக அரசு மற்றும் பல்வேறு அமைப்புகளின் பரிசைப் பெற்றிருக்கின்றன என்பதே அவர் திறமைக்குத் தக்க சான்றாகும்.

பரிசு பெற்ற நூல்களில், அவர் எழுதிய "தாகூர்" என்னும் நூலும் ஒன்றாகும்.

40க்கும் மேற்பட்ட தமிழ் அறிஞர்களின் நூல்களை அவர் வெளியிட்டுள்ளார். மணிவாசகர் பதிப்பக வெளியீடாக, தம் நூல் வெளிவருவதைத் தமிழ் அறிஞர்கள் பெருமையாகக் கருதுகிறார்கள்.

மெய்யப்பன் தமிழறிஞர்களை தெய்வத்திற்கு அடுத்தபடியாக மதிக்கிறார். தமிழறிஞர் பேராசிரியர் டாக்டர் வ.சுப. மாணிக்கம் அவர்களிடத்தில் அவர் காட்டி வந்த அன்பையும், கொண்டிருந்த தொடர்பையும் த மி ழு ல க ம் நன்கறியும்.

சிதம்பரத்திலும் தமிழகத்திலும் அவருடைய அறச்செயல்களால் பல நற்பணிகள் நடைபெற்று வருகின்றன. பத்துக்கும் மேற்பட்ட அமைப்புகளில் அவர் அறக்கட்டளைகள் நிறுவி, நிதி உதவிகள் செய்துள்ளார்.

விரைவில் நூற்றாண்டு விழாவைக் கொண்டாட இருக்கிற அல்லயன்சு கம்பெனியின் உரிமையாளர் குப்புசாமி ஐயர், பொன் விழாக் கண்ட சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தின் தந்தை வ. சுப்பையாப் பிள்ளை, 'சக்தி' கோவிந்தன், தமிழ்ப்பண்ணை சின்ன அண்ணாமலை, இன்னும் நம்மிடையேவாழ்ந்துவரும் தமிழ்ப்புத்தகாலயம் கண. முத்தையா. பாரி நிலையம் செல்லப்பன், அருணோதயம் அருணன் ஆகியோர் வரிசையில்,'பதிப்புச் செம்மலாக' உயர்ந்து லளர்ந்திருக்கிற டாக்டர் ச. மெய்யப்பன், வானதி பதிப்பகம் 'திருநாவுக்கரசு - காளியம்மை ஆச்சி' மணிவிழாவின் போது, "இன்றைய சிறந்த பதிப்பாளராகத் தமிழகம் போற்றும் வானதி திருநாவுக்கரசை—"ஒரே துறையில் உவ்ளவர்கள், ஒருவரை ஒருவர் பாராட்டுவது அரிதான இக்காலத்தில் — மனம் திறந்து, 'தமிழ்ப் புத்தக உலகின் டாட்டா"என்று பாராட்டினார்.

—இது 'பதிப்புச் செம்மல்' டாக்டர் மெய்யப்பனின் வெள்ளை உள்ளத்திற்கும் உயர்ந்த பண்பாட்டிற்கும் சான்றாகும்.

'பதிப்புச் செம்மல் பேராசிரியர் டாக்டர் ச. மெய்யப்பன் அவர்கள் மேலும் பல சாதனைகளை நிகழ்த்தி. பெரும்புகழைக் குவிக்க வேண்டும் என்பதே நமது விருப்பம்.

வாழ்க பதிப்புச் செம்மல் பேராசிரியர் டாக்டர் ச. மெய்யப்பன்!

தபால் பெட்டி எண். 637

7, கிழக்கு மாடவீதி, மயிலை, சென்னை-600 004

தனி இதழ்	ரூ. 3-00
ஆண்டுக் கட்டணம் (சிறப்பு மலர் உள்பட)	ரூ. 40-00
ஆயுள் சந்தா	ரூ. 400-00

இளம் எழுத்தாளர்களின் சிறுகதை, கவிதை, கட்டுரை முதலிய படைப்புகள் வரவேற்கப்படுகின்றன.

தபால் பெட்டி எண்ணை, உங்கள் கடிதங்களில் தவறாமல் குறிப்பிடவும்.

கண்டெடுத்த வைரங்கள்

சென்னையில் வீரர்கள்

வணங்காமுடி (கண்ணதாசன்) கட்டுரை 1946

தமிழ் எழுத்தாளர் இரண்டாவது மாநாடு, எழுத்தாளர் நலனையும், தமிழ்ச் சீர்திருத்தத்தையும் நோக்கமாகக் கொண்டு சென்னை ஒற்றைவாடைத் தியேட்டரில், 1946 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 14, 15 தேதிகளில் நடைபெற்றது.

இம்மாநாட்டில் கலந்து கொள்வதற்காக எழுத்தார்வம் மிக்க 17, 18 வயதே நிரம்பிய—இளம் கண்ணதாசன் புதுக்கோட்டையிலிருந்து புறப்பட்டு ஒரு நாள் முன்னதாகவே சென்னைக்கு வந்தார். மறுநாள் காலை மாநாட்டுத் தலைவர் பெ. தூரனை வரவேற்க சென்டிரல் புகைவண்டி நிலையத்திற்கும் சென்றார்.

அப்போது அவர் புதுக்கோட்டையில் க. நாராயணன் நடத்தி வந்த 'தாய்நாடு' இதழுக்கும் ஒரு செட்டியார் நடத்தி வந்த 'அணிகலன்' இதழுக்கும் புதுக்கோட்டையில் தங்கி கட்டுரைகள் எழுதி வந்தார். ஒவ்வொரு கட்டுரைக்கும் ரூபாய் ஐந்து வெகுமதியாக அவருக்குக் கிடைத்தது. அதைத் தவிர அருப்புக்கோட்டை சேவகரத்தினம் நடத்தி வந்த 'மேதாவி' என்னும் சிற்றிதழுக்கும் ஆசிரியராக இருந்தார்.

இந்த நிலையில்தான் அவர் மேற்படி மாநாட்டில் கலந்து கொண்டார்.

இம்மாநாட்டில் திருவாளர்கள் பெ. தூரன், வ. ரா, நாரணதுரைக் கண்ணன், ம. பொ. சிவஞானம், ப. ஜீவானந்தம், சி.என். அண்ணாத்துரை, நாமக்கல் கவிஞர், கம்பதாசன், ஏ. ஜி. வெங்கடாச்சாரி, டி.எஸ். சொக்கலிங்கம், கல்வி மந்திரி அவினாசிலிங்கம் செட்டியார், குயிலன், தமிழ் ஒளி, சுப. நாராயணன், ரா. நாராயணன் சுதேசமித்திரன் சி. ஆர். சீனிவாசன், பாசு, முத்துசாமி, சாவி, நாரதர் சீனிவாசன், கவி. கா. மு. ஷெரீப், இராவ் பகதூர் சம்பந்த முதலியார், கனம் பக்தவத்சலம் ஆகியோர் கலந்து கொண்டனர். சில பிரபல எழுத்தாளர்கள் இம்மாநாட்டைப் புறக்கணித்தனர். எனினும் சுமார் 200 எழுத்தாளர்கள் இம்மாநாட்டில் பங்கு பெற்றனர்.

பங்கு பெறாத பிரபல எழுத்தாளர்களை கண்ணதாசன் கண்டிக்கிறார்.

இட்டுரையில் நாமக்கல் கவிஞரைத் தாக்கி எழுதுகிற கண்ணதாசன் தம்மை 'ஒரு தேசிய வாதி' என்று குறிப்பிடுகிறார். பின்னாளில், நாமக்கல் கவிஞரின் கருத்துக்களை அவர் ஏற்றுக் கொண்டார்.

'பொன்னி' ஆசிரியர் முருகு சுப்பிரமணியம் 'குமரன்' பத்திரிகையில் ஆசிரியராக இருந்த போது, அதில் 'ஜெய் ஹிந்த்' என்னும் சிறு கதையை 'நேதாஜியின் மீதுள்ள பக்தியினால்' எழுதியதாக வேறொரு சந்தர்ப்பத்தில் கண்ணதாசன் குறிப்பிட்டுள்ளார். நேதாஜியின் படையை மையமாக வைத்து 'செத்தான் சாகவில்லை' என்னும் சிறுகதையையும் 1946ல் அவர் எழுதி இருக்கிறார். இவை அவர் தேசிய வாதியாகவே இருந்தார் என்பதற்கு ஆதாரங்களாகும்.

இக்கட்டுரையில் மாநாட்டில் கலந்து கொண்ட சில எழுத்தாளர்களை அவர் பாராட்டுகிறார். 'வ.ரா. சரியான சாட்டையடி கொடுத்தார்' என்றும், ப. ஜீவானந்தம் 'பதுங்கிப் பாயும் புலி மாதிரி நின்றார்' என்றும் பெ. தூரன் 'கருத்து மிகுந்த சொற்பொழிவை நிகழ்த்தினார்' என்றும், குறிப்பிடுகிறார், கம்பதாசன், தமிழ் ஒளி ஆகியோர் கவிதை வரிகளைக் குறிப்பிட்டு எழுதி உள்ளார்.

தாய்நாடு கட்டுரையில் இரண்டு தலைவர்களை அவர் சிறப்பாகப் பாராட்டி எழுதி உள்ளார். இரு தலைவர்களாலும் அவர் பெரிதும் கவர்ச்சிக்கப் பட்டிருந்தார்.

ஒருவர் ம.பொ. சிவஞானம், இன்னொருவர் அண்ணா.

தன் வரலாறான வனவாசத்தில், அண்ணா, மேற்படி மாநாட்டுக்கு வந்த போது 'அண்ணாவைப் பேசச் சொல்லுங்கள்' என்று கூட்டத்திலிருந்து கூவியதாக அவர் எழுதி உள்ளார்.

மேலும் தலைவர் 'அண்ணாத்துரை பேசுவார் என்றது ரேடியோவில் ஒலி பரப்புவோர், திருமதி எம். எஸ். சுப்புலட்சுமி பாடுவார் என்பது போலிருந்தது என்று குறிப்பிட்டுள்ளார்.

''விஞ்ஞானத்தைப் பற்றிக் கேட்டால் தமிழனுக்குத் தெரியாது; எமனுக்கு வாகனம் என்ன?'' என்றால் ''எருமைக் கடா என்பான்'' என்று அண்ணா சொன்ன கருத்து அங்கே சொன்னதுதான் என்றும் இந்நூலில் பாராட்டி எழுதி உள்ளார்.

''அதே போல், சிலம்புச் செல்வர் ம.பொ.சி. அவர்கள் மாநாட்டில் வந்த இரண்டொரு தீர்மானங்களில் காட்டிய பிடிவாதமும் நேர்மையும் அவனைக் கவர்ந்தன'' என்கிறார். மாநாடு முடிந்ததும் லிங்கிச் செட்டித் தெருவிலிருந்த 'தமிழ் முரசு' அலுவலகத்தில் ம.பொ.சியைச்

சந்தித்துப் பேசியதை வனவாசத்தில் குறிப்பிடும் கண்ணதாசன் அண்ணாத் துரையைப் போலவும் ம.பொ.சியைப் போலவும் தமக்குப் பக்குவமில்லையே என்று வருந்துகிறார். அவர்களைப் போல பிரபலமாக வர வேண்டும் என்னும் விழைவினை 18, 19 வயதில் அவர் பெற்றிருந்தார்.

வனவாசம் எழுதியபோது கண்ணதாசனுக்கு 'தாய் நாடு' இதழில் எழுதிய மாநாடு பற்றிய கட்டுரை கிடைக்கவில்லை என்பதோடு எழுதிய நிகழ்ச்சிகளும் சரியாக நினைவிலில்லை என்றே கருதத் தோன்றுகிறது.

தாய் நாடு இதழில் வெளியான "சென்னையிலே வீரர்கள்" என்றும் இக்கட்டுரையில் அண்ணாவின் எழுத்தாளர் மாநாட்டுப் பேச்சு இரண்டு பக்க அளவில் வெளி வந்துள்ளது. வேறு எதிலும் காணப்படாத இப்பேச்சு இன்றைக்குப் படித்தாலும் சுவையாகவே இருக்கிறது. கண்ணதாசன் இப்பேச்சில் மயங்கி சொக்கி விட்டார் என்றே கூற வேண்டும்.

பின்னாளில் அவர் எழுதிய 'மனவாசம்' நூல் முன்னுரையில் வனவாசத்தில் எல்லா உண்மைகளையும் பகிரங்கமாகச் சொல்லி விட்டது போல் பலபேருக்கு ஒரு பிரமை உள்ளது என்று கூறுகிறார்.

படிப்பவர்க்கு அப்படி ஒரு மயக்கம் இருப்பது உண்மையே யாகும்.

பல விஷயங்களை 'மனவாசம்' நூலுக்குப் பிறகும் அவர் மறையும் வரைக்கும் சொல்லாமலேயே விட்டு விட்டார் என்றே நான் கருதுகிறன்.

அதில் ஒன்று சிலம்புச் செல்வரோடும் தமிழரசுக் கழகத்தோடும் அவர் கொண்டிருந்த தொடர்பு.

அதைப் பிற்காலத்தில் சொல்ல வேண்டிய அவசியச் சூழ்நிலை அவருக்கு நேரிடவில்லை என்பதும் அதற்கு ஒரு காரணமாகும்.

வனவாசம் நூலில் சரியாகக் குறிப்பிடாமல் விட்டு விட்ட ம.பொ.சியின் பேச்சு பற்றிய வர்ணனை 'தாய் நாடு' கட்டுரையில் வெளி வந்துள்ளது. அதில் ம.பொ. சியின் பேச்சாற்றலை விவரிக்கிறார்.

"பின்னர் வரா பேசி முடித்ததும் ம.பொ. சிவஞான கிராமணியார் வந்தார். சபையில், ஒரே ஆரவாரம். கிராமணியார் முறுக்கி விட்ட 'மீசை'யுடன் மைக் அருகே வந்தபோது, என் உள்ளத்தில் ஏற்பட்ட உற்சாகத்தை உடம்பில் ஏற்பட்ட குறுகுறுப்பு காட்டிற்று. 'அன்றந்த லங்கையினை ஆண்ட மறத்தமிழன்' அவன் மீசை கண் முன்னே வந்தது. 'தோழர்களே! என்று ஆரம்பித்த பொழுது வில்லினின்றும் நெறித்த சரத்தின் ஒலி கேட்டது. அளவுகடந்த உற்சாகத்தில் ஆழ்ந்து கிடந்தேன். தமிழர் யார், தமிழ் இனம் எப்படி வாழ்ந்தது, இன்றுள்ள நிலையென்ன என்பதை அழகாக, ஆணித்தரமாக எடுத்துக் கூறினார். தமிழகத்தில் 'தமிழரசு ஏற்படும் பொழுது குடியரசுத் தலைவராக கிராமணியாரையே தேர்ந்தெடுக்க வேண்டும் என்று ஏதோ எல்லாம் என் கையில் இருப்பது' போல் எண்ணிக் கொண்டேன்" என்று எழுதுகிறார்.

—கவிஞர் சொல் பலிக்கும் என்று சொல்வார்கள். சிலம்புச் செல்வர் பின்னாளில் சட்ட மன்ற மேலவைத் தலைவராக விளங்கினார் என்பது வரலாறாக அமைந்து விட்டது.

அண்ணாவின் ரசிகரான கண்ணதாசன் அண்ணாவுக்குப் பதவி தருவதுபற்றிச் சிந்திக்கவில்லை. அண்ணா பங்கு பெற்றிருந்த திராவிடர் கழகம் பதவிக்குச் செல்லாத கட்சியாகத் தன்னைப் பிரகடனப்படுத்திக் கொண்டது, அதற்குக் காரணமாக இருக்கலாம்.

கண்ணதாசன் 18, 19 வயதினராக இருந்த காலத்தில் எழுதிய இக்கட்டுரை மிக அருமையாக அமைந்துள்ளது. கண்ணதாசன் 'வாலை அசைத்துக் கொண்டு நீந்தும் மீனைப் போல' தம் எழுத்தாற்றலை இக்கட்டுரையில் வெளிப்படுத்தி உள்ளார் தமிழ் இலக்கிய வரலாற்றில் இடம் பெற வேண்டியது இம்மாநாடு மட்டுமன்று, கண்ணதாசனுடைய கட்டுரையுமாகும்.

கண்ணதாசன் இக்கட்டுரையை, பல்வேறு இடங்களில், பல்வேறு சந்தர்ப்பங்களில் மிகப் பெருமையாகக் குறிப்பிட்டுள்ளார். இக்கட்டுரையால் கண்ணதாசன் சுயமரியாதை இயக்க வட்டாரத்தில் பிரபலமானார்.

பொன்னி ஆசிரியர் முருகு சுப்பிரமணியத்தை 1947-48ல் கண்ணதாசன் சந்தித்த போது 'இக்கட்டுரையை எழுதியது தாங்கள்தானே!' என்று கேட்டுப் பாராட்டினார். அண்ணாவைச் சந்தித்த போது அண்ணாவும் அவ்விதமே கேட்டார்.

1975ல் எழுதிய துக்ளக் கட்டுரை ஒன்றில் கண்ணதாசன் இந் நிகழ்ச்சியை விவரிக்கிறார்.

"எழுத்தாளர் மாநாட்டில்அவர் (அண்ணா) பேசிய பேச்சும் மெய் சிலிர்க்க வைப்பதாகவே இருந்தது.

நாசூக்கான அந்தப் பேச்சை நான் மறு வாரமே 'தாய் நாடு' பத்திரிகையில் வெளியிட்டிருந்தேன்.

ஆனால் சுயமரியாதை இயக்கத்தில் எனக்கு ஈடுபாடில்லை,

கலைவாணர் என். எஸ். கே. அவர்கள் காந்தியடிகள் கொல்லப்பட்ட மறுநாள் (31-1-48) காஞ்சிபுரத்திலிருந்த அவரிடம் அழைத்துச் சென்றார்கள்.

அன்று அவர் உண்மையில் துக்கம் கொண்டாடிக் கொண்டிருந்தார். வீட்டிலே சமையல் இல்லை முதல் நாள் மாலையிலிருந்தே யாரும் சாப்பிடவில்லை.

கலைவாணர் என்னை அறிமுகப் படுத்தியதும் அவர் என்னிடம் கேட்ட முதல் கேள்வி "தாய் நாடு" இதழில் எழுதியது நீங்கள் தானா? என்பதாகும்.

நான் 'ஆமாம்' என்யேன்.

அந்த நாளில் சுயமரியாதை இயக்கத்தவரின் பேச்சுக்களை எந்தப் பத்திரிகையும் பிரசுரிப்பதில்லை.

அதனால் ஏதாவது ஒரு சிறிய பத்திரிகையில் செய்தி வந்தாலும் அது ஆவலோடு படிக்கப்பட்டது.

என் கட்டுரையை அண்ணா அவர்கள் பாராட்டினார்கள்.

இக்கட்டுரையைக் கவிஞர் கண்ணதாசன் "வணங்காமுடி" என்னும் பெயரில் எழுதினார்.

"வணங்காமுடி" என்னும் பெயரைக் கட்டுரையின் கீழே போட்டேன் என்று" அவர் வனவாசத்

தில் குறிப்பிட்டுள்ளார். ஆனால் ''வணங்காமுடி'' என்னும் பெயர் 'தாய் நாடு' இதழில் கட்டுரையின் மேலேயே — தொடக்கத்திலேயே—வெளியிடப்பட்டுள்ளது.

இக்கட்டுரையைப் படித்ததும் 1946ல் நடைபெற்ற எழுத்தாளர் இரண்டாவது மாநாட்டை நாம் நேரில் பார்த்தது போன்ற உணர்வு ஏற்படுகிறது.

தாய் நாடு 1947 ஜனவரி, பிப்ரவரி ஆகிய இரு இதழ்களில் ஒன்பது பக்க அளவில் வெளிவந்துள்ள இக்கட்டுரை, ''இதில்வரும் அபிப்ராயங்கள் அன்பர் 'வணங்காமுடி'யின் சொந்த சரக்குகள். பத்திரிகையின் கொள்கையை அவை பிரதிபலிக்கவில்லை'' என்னும் ஆசிரியர் குறிப்புடன் வெளிவந்துள்ளது.

இக்கட்டுரையை எழுதிய கண்ணதாசனும் வெளியிட்டுதவிய 'தாய்நாடு' இதழின் ஆசிரியர் க. நாராயணன் அவர்களும் தமிழர்களின் பாராட்டுக்குரியவர்களாகிறார்கள்,

—தி. வ. மெய்கண்டார்

தொலைபேசி : 543297

இலட்சுமி ஸ்டோர்ஸ்

மொத்த வியாபாரம் :

அரிசி, நவதானிய எண்ணெய்ப் பொருட்கள்

எம்மிடம் கிடைக்கும்

G. வரதராஜன்

''இன்டஸ்டிரியல் கான்டீன் காண்டிராக்டர்

பெரியார் நகர், திருவொற்றியூர்

327/2 திருவொற்றியூர் நெடுஞ்சாலை,

திருவொற்றியூர், சென்னை-600 019

கண்டெடுத்த வைரங்கள்

கண்ணதாசன் எழுத்தாளர் மாநாடு பற்றி எழுதிய கட்டுரை. (1946)

சென்னையிலே வீரர்கள்

''வணங்காமுடி''

புறப்பட்டோம்

டிசம்பர் 12உ மத்தியானம் இரண்டு மணிக்குக் கிளம்பினேம் ஊரைவிட்டு உற்சாகம் கரை புரண்டு ஓடிற்று, முதல் இரவு படுக்கையறைக்குச் செல்லும் இளம் பெண்ணின் உற்சாகம் போல. திருச்சி ஜங்ஷனில் ஒரு மணி நேரம் ''க்யூ'' விலே முன்னேறி டிக்கட் எடுத்து ''திருச்சி எக்ஸ்பிர''ஸில் புறப்பட்டோம்.

13உ காலை எட்டு மணிக்கு எக்ஸ்பிரஸ் எழும்பூரை அடைந்தது. மேல் தட்டிலே சுகமாகத் தூங்கிக் கொண்டிருந்த என்னை நண்பர் நாராயணனின் குரல் இறக்கி விட்டது! பையை எடுத்துக் கொண்டு நடந்தோம், யாராவது தேடி வந்திருக்கிறார்களா என்று பார்த்துக் கொண்டே. எதிர்பார்த்தது போலவே நண்பர் முத்துச்சாமியும், வாசுவும் வந்திருந்தார்கள். ஆனல் அவர்கள் எங்களைத் தேடி வரவில்லை என்பதை ''நாமக்கல் கவிஞர் வந்திருக்கிருரா என்று பார்க்க வந்தோம்'' என்று அவர்கள் சொன்னதிலிருந்து தெரிந்து கொண்டோம். ஆனல் நாங்கள் யாரும் தேடி வருவார்கள் என்பதற்காக மாநாட்டிற்குப் போகாததால் கவலையற்று நடந்தோம்.

அன்று முழுவதும் மாநாட்டைப் பற்றிக் கனவு கண்டு கொண்டிருந்தோம்.

பொழுது புலர்ந்தது எப்பொழுதும் போல! 14உ காலை 6 மணிக்கு அவசரம் அவசரமாக படுக்கையைச் சுருட்டி விட்டு எழுந்தோம். பல் துலக்கிக் குளித்துச் சென்ட்ரல் ஸ்டேஷனுக்குப் புறப்பட்டோம. நாங்கள் ஸ்டேஷனுக்குள் நுழைவதற்கும்நாரண துரைக்கண்ணன், ரா. நா., இனிய நண்பர் அ. இளங்கோவன் உட்பட எழுத்தாளர்கள் தலைவரை அழைத்து வந்ததற்கும் சரியாக இருந்தது. கம்பீரமாக ஆனல் சாந்த முகத்துடன், நறுக்கு மீசை, மூக்குக் கண்ணுடி கதர் ஜிப்பா சகிதம் காட்சியளித்த நண்பர் பெ. தூரனை இவர் தான் தூரன் என்று காட்டிவைத்

திரர் தோழர். நாரண துரைக்கண்ணன். ஒரு வழியாக எல்லோரும் மாநாடு நடக்க வேண்டிய ஒற்றை வாடைத் தியேட்டருக்கு வந்து சேர்ந்தோம்.

ஒற்றை வாடைத் தியேட்டரையும் அதற்குள் கூடப் போகும் கூட்டத்தையும் நான் :முதல்நாள் கற்பனை செய்திருந்ததை, அங்கு கூடியிருந்த கூட்டத்தை ஒப்பிட்டுப் பார்த்தபோது அழுவதா சிரிப்பதா என்று புரியவில்லை. ஆர்வமிக்க சில அயலூர் எழுத்தாளர்களும் குறிப்பிட்ட சில சென்னை எழுத்தாளர்களும்தான் மாநாட்டில் கலந்து கொண்டார்கள். பிரபல(?) எழுத்தாளர்கள் சிலர் ஓய்வில்லாத காரணத்தாலோ, அகம்பாவத்தினலோ மாநாட்டைப் பற்றிய சிந்தனையே இல்லாமல் இருந்து விட்டார்கள். இது வருந்தத்தக்க ஒன்று. முத்துச்சாமிக்காகவோ, துரைக்கண்ணனுக்காகவோ, ரா. நா. வுக்காகவோ மாநாடு நடக்கவில்லை; பொதுவாக எழுத்தாளர் நலனுக்காகவும், தமிழ்ச் சீர்திருத்தத்திற்காகவும் கூட்டப்பட்டது. இந்த மாநாடு. யார் எப்படிப் போனலென்ன, தமிழர் நல்வாழ்வு வாழ வேண்டியது அவசியம். அந்த வாழ்வை ஏற்படுத்த வேண்டியது ஒவ்வொரு எழுத்தாளனின் பொறுப்பு இதை மறந்து நாமும் மற்ற எழுத்தாளர்களோடு சமமாக வைத்து எண்ணப்படுவதா என்ற நினைவில் தங்களை ஒரு சரோயனகவும் ஷெல்லியாகவும் கீட்ஸாகவும் எண்ணிக் கொண்டிருக்கும் எழுத்தாள நண்பர்கள் சூழ்நிலை வசதியால் கர்வங் கொண்டு அலைவது அவர்களுக்கே வெட்கம்; தமிழ் நாட்டுக்கு ஒரு சீர்கேடு; தமிழருக்கு இழுக்கு. நினைத்துப் பார்த்தால் அவர்கள் நெஞ்சே சொல்லும் இதை! நிற்க

சரியாக ஒன்பதரை மணிக்கு மாநாடு ஆரம்பமாயிற்று. தலைவர் பீடத்திலே தூரன் அமர்ந்த பிறகு என். எஸ். கே. நாடக சபை நடிக மணிகள் தங்கள் வாய்த்திறனைக் காட்டினர்கள் அதன் பின் திரு ரா. நாராயணன் "சங்க நியதி"ப் படித்து தலைவரைப் பிரேரிபித்தார்.அதை ஆமோதித்து வ. ரா. பேசினர், வழக்கப்படி தான் ஏன் திறப்பாளராக இருக்க ஒப்புக் கொள்ளவில்லை என்பதையும் எழுத்தாளரிடமுள்ள குறைபாடுகளையும் எடுத்துக் காட்டினர். "ஒவ்வொரு எழுத்தாளரையும் வ. ரா. தூக்கி விடுகிருர். இது பெருந்தவறு என்று சில பேர் ஓலமிடுகிருர்கள். யார் அப்பன் வீட்டுச் சொத்து பறிபோகிறது. அப்பா, நீ மார்க்ஸ் மாதிரி எழுதுறே நீ செக்காவ் மாதிரி எழுதுறே நீ ரூஸ்ஸோ மாதிரி எழுதுறே என்று தட்டிக் கொடுப்பதனல் எழுத்தாளர்கள் கெட்டுப் போகிருர்களாம். அடேயப்பா, இவர்கள்தாண்டாப்பா எழுத்தாளர் நலனைப் பாதுகாப்பவர்கள் மொழி பெயர்ப்பு மட்டும் இலக்கியமில்லை தம்பி! அது குப்பை! ஆமா!...... இந்தப் போட்டி, பொருமை புகைச்சல் இதெல்லாம் எழுத்தாளர்களிடமிருந்து அடியோடு ஒழியணும் ... ஆனல் ஒண்ணுமட்டும் ஞாபகத்திலே வச்சுக்கங்கோ... எழுத்தாளன் இருக்கானே,அவன் ராஜாவிலேயும் பெரியவன். அவனைக் கண்டால் மன்னன் முதல் அனைவரும் எழுந்து மரியாதை செய்யணும். நீ தான் ராஜா... உலகத்துக்கே புத்தி புகட்டுறவனப்பா நீ!... இதை மறந்துட்டியே...? அதனலேதான் கவலை என் நெஞ்சைக் கவ்வுகிறது,ஒருத்தரை யொருத்தர் சக்களத்தி மகனைப் பார்க்கிற மாதிரி பார்க்

கிறீர்களே... ஏன்! உலகம் உங்களுக்குள்ளே... இதை மட்டும் மறந்துடாமே புது சமுதாயத்தை நிர்மாணிக்க முயலுங்கள்..."

இப்படியாக வ. ரா. சரியான சாட்டை கொடுத்து விட்டு,தான் உட்கார்ந்து பேசிய நாற்காலியைத் தூக்கிக் கொண்டு 'மைக்'கை விட்டகன்ருர்.

பின்னர் திரு ம. பொ. சிவஞான கிராமணியார் வந்தார். சபையில் ஒரே ஆரவாரம். கிராமணியார் முறுக்கிவிட்ட மீசையுடன் 'மைக்' அருகில் வந்த போது என் உள்ளத்தில்ஏற்பட்ட உற்சாகத்தை உடம்பில் ஏற்பட்ட குறு குறுப்பு காட்டிற்று. "அன்றந்த லங்கையினை ஆண்ட மறத் தமிழன்"அவன் மீசை கண் முன்னே வந்தது. "தோழர்களே என்று ஆரம்பித்தபொழுது வில்லினின்று தெறித்த சரத்தின் ஒலி கேட்டது. அளவுகடந்த உற்சாகத்தில் ஆழ்ந்து கிடந்தேன். தமிழர் யார், தமிழ் இனம் எப்படி வாழ்ந்தது, இன்றுள்ள நிலையென்ன என்பதை அழகாக ஆணித்தரமாக எடுத்துக் கூறினர். தமிழகத்தில் தமிழரசு ஏற்படும் பொழுது, குடியரசுத்தலைவராகக் கிராமணியாரையே, தேர்ந்தெடுக்க வேண்டும் என்று ஏதோ எல்லாம் என் கையில் இருப்பது போல எண்ணிக் கொண்டேன்.

பின்னர் தோழர் ஜீவானந்தம் பேசினர்.மேடைக்கு அவர் வந்த பொழுதும் ஒரே கைதட்டல். "ஏழை, செல்வன் என்ற பேதமின்றி எல்லோரும் சமமாக வாழ வேண்டும்" என்றும் தமிழரின் இயற் குணத்தை இது பிரதிபலித்தது. பதுங்கிப் பாயும் புலி மாதிரி நின்ருர் மேடையிலே! யாரும் காட்டாத சில அருமையான மேற்கோள்களை மார்க்ஸிலிருந்து எடுத்துக் காட்டினர் நேரம் அதிகமாய் விட்டதால் பல விஷயங்களைச் சொல்லாமலேயே அமர்ந்தார்.

தோழர் ஜீவானந்தம் பேசிக் கொண்டிருந்த பொழுதுதான் திறப்பாளர் நாமக்கல் கவி வந்து சேர்த்தார். குறிப்பிட்ட நேரத்தில் வருவது பெரிய மனிதருக்கு அழகல்ல வென்று நினைத்தாரோ என்னவோ கூட்டம் ஆரம்பித்து வெகு நேரம் கழித்துத் தான் வந்து சேர்ந்தார். அவரது திறப்புரையை 48 பக்கங்கள்கொண்ட புத்தகமாக அச்சிட்டிருந்தார்கள். புத்தகத்தைக் கையிலெடுத்துப் படிக்க ஆரம்பித்தார். சபையோருக்குத் தலைவலி, திருகுவலியெல்லாம் வரத் தொடங்கின. அவரது பேச்சிலே சுவையான பகுதி, "இத்துடன் எனது சிற்றுரையை முடித்துக் கொள்ளுகின்றேன்" என்றதுதான்.

இடையிலே கவிஞர் அர்த்த மற்ற சர்ச்சைகளைக் கிளப்பி விட்டார் ஆரிய திராவிட விவகாரத்தைப் பற்றி, அவருக்கு எவ்வளவு தூரம் தெரியும் என்பதை வாசாம கோசரமாய் விளக்கினர். "வீணாக அவர்களைத் தூற்றக் கூடாது" என்று வடக்கத்தியார்களுக்கு வக்காலத்து வாங்கினர். இடையிலே பலத்த கர கோஷத்துக்கிடையில் மேடை மீது வந்தமர்ந்தார் தோழர் அண்ணத்துரை. கவிஞரோ, அத்தைப் பாட்டி கதையெல்லாம் அளந்தார். பொறுமையிழந்தது சபை. "......இப்படி அழகான ஆராய்ச்சி ஒன்று எழுதியிருக்கிறேன். படித்துப் பாருங்கள்........" என்று சபையோருக்கு அபயம் கொடுத்துப் பக்கத்தைப் புரட்டினர். "ஆரியர்கள் திராவிட நாட்டிலிருந்து போனார்கள்" என்று "மொட்

டைத்தாதன் குட்டையில் வீழ்ந்தான்'' என்கிற முறையில் ஏதேதோ சொல்லிக் கொண்டு போனார். தோழர். அண்ணாத்துரையைத் தாக்கி விட்டதாகவோ, தன்மானக்காரர்களை ''மட்டந்தட்டி'' விட்டதாகவோ நினைத்துப் படித்துக்கொண்டு போனார். நான் ஒரு தேசீய வாதி. நானும் தலை குனிந்தேன் கவிஞரின் அறியாமைக்கு நாணி! மறுநாள் தினசரிப் பத்திரிகைகள் கவிஞரின் சிறப்புரையைப் பற்றிப் பத்தி பத்தியாக எழுதின. ஆனால் எழுத்தாளர் உலகத்தையே திருத்தியமைத்த தோழர். அண்ணாத்துரையின் அதியற்புதச் சொற்பொழிவை 'இருட்டடிப்பு'ச் செய்து விட்டன. ஆனால் அந்த இருட்டடிப்பில்தான் தமிழர்களின் விழிப்பு ஏற்பட்டிருக்கிறது! ''எவ்வளவு அழகாகப் பேசினார். ஒரு வரி கூடக் காணோமே''என்று நினைத்த தமிழர்கள் விழித்துக் கொண்டார்கள். உண்மை புலனானது.

பிறகு தோழர் 'கம்பதாசன்' வந்தார் வாழ்த்துப் பாட.

''சாரத்தமிழிலே, வீரக்
கவிஞனும்
பாரதி தொண்டர் கூட்டம்!
கூட்டம்!''

என்று ஆரம்பித்து உணர்ச்சியோடு பாடினார்.

தலைவரோ கருத்து மிகுந்த தன்னுடைய சொற்பொழிவை நிகழ்த்தினார்.

பிறகு கல்வி மந்திரி கனம். டி. எஸ். அவினாசிலிங்கம் தன்னால் இயன்றதைச் செய்வதாய் வாக்குறுதி கொடுத்து ''ஆண்டவன் அருளாலே'' பேசினார்.

பின்னர் தலைவர், ''தோழர் ஸி. என். அண்ணாத்துரை அவர்கள் பேசுவார்கள்'' என்றதும் ரேடியோவில் ஒலி பரப்புவோர், ஸ்ரீமதி. எம். எஸ். சுப்புலக்ஷ்மி அவர்கள் பாடுவார்கள்'' என்பது போலிருந்தது!

அண்ணாத்துரை 'மைக்' அருகில் வந்தார்.

பேசுகிறார்

அருமைத் தோழர்களே!

தலைவர் அமைச்சரைக் கூப்பிட்டு விட்டு அமர்ந்தார்; அமைச்சர் ஆண்டவனை அழைத்து விட்டு அமர்ந்து விட்டார்! (கரகோஷம்) புது உலகம் அமைக்கவிருக்கும் வீரர்கள் ஆண்டவன் அருளை வேண்டி நிற்கச் சொல்கிறார் அமைச்சர். ஆண்டவன் அருள் எப்பொழுதும் இருக்கும்—...... அமைச்சர் சொல்லி வர வேண்டியதில்லை! மேலும் நாமக்கல் கவிஞர் போன்ற பக்தர்கள் இருக்கும் இடத்தில் ஆண்டவன் அருளுக்குக் குறைவா, என்ன! (கரகோஷம்) அமைச்சர் விரும்பும் ஆண்டவன் அருள் கிடைக்காவிட்டாலும் அமைச்சர் போன்ற ஆள்பவர் அருள் இருந்தால் எதைத்தான் சாதிக்க முடியாது!

அணுகுண்டும் ஆளில்லா விமானமும் அங்கே அன்னிய நாட்டிலே... பிறக்கும் போது, கம்பராமாயணமும், கந்தபுராணமும் இங்கே...... ஏட்டிலே சிறக்கிறது. அங்கே நாடுகள் வளர்க்கின்றன... நாகரீகத்தை, இங்கே ஏடுகள் வளர்க்கின்றன— மூடத்தனத்தை! (கரகோஷம்)

ஆக்கவும் அளிக்கவும் சக்தி படைத்தவர்கள் எழுத்தாளர்கள். நாட்டுப் புறத்திலிருக்கும்

ஏழை மக்களுக்கு ராமாயணமும், மகாபாரதமும் சொல்லித் தெரிய வேண்டிய விஷயங்களல்ல. இவை இரண்டும் வேண்டுமா வேண்டாமா என்பது பிரச்சினையல்ல. சொன்னதையே திருப்பத் திரும்பச் சொல்ல வேண்டாம் என்றுதான் சொல்கிறேன்.

இன்று நாட்டுபுறத்தான் ஒருவனை கூப்பிட்டுக் கேளுங்கள், ''ஆகாய விமானம் கண்டுபிடித்தது யார்'' என்று. ''தெரியாது'' என்பான்:

அணுகுண்டு கண்டுபிடித்தது யார். தெரியாது; சப்மரீன் கண்டு பிடித்தது யார்— தெரியாது; ரேடியோ கண்டு பிடித்தது யார்- தெரியாது; நமது பிரதம மந்திரி யார்— தெரியாது; இரண்டாவது மகாயுத்தம் எப்பொழுது ஆரம்பித்தது—தெரியாது; முதன் முதல் இந்தியாவுக்கு வந்த ஆங்கிலேயன் யார்— தெரியாது; எமனுக்கு வாகனம் என்ன— எருமைக்கடா! (பலத்த கரகோஷம்) இப்படி வேரூன்றிப் போயிருக்கும் அஞ்ஞானத்தை வேரோடு கிள்ளி எறிய முடியும் உங்களால்.

கானகத்திலே ராமன் பட்ட கஷ்டத்தை எழுதவேண்டாம்; கர்னாடிக் மில்லிலே ரத்தவேர்வை சிந்தும் தொழிலாளியின் நரக வேதனையைப் பற்றி எழுதுங்கள். அயோத்தியில் தசரதன் மாளிகையைப் பற்றி எழுத வேண்டாம்— ஆலைத் தொழிலாளியின் ஓலைக் குடிசையைப் பற்றி எழுதுங்கள். அசோகவனத்தில் சீதையின் கண்ணீரைப் பற்றி எழுத வேண்டாம்; அந்த அசோகவனமும் கிடைக்காமல், ஆலமரமும் கிடைக்காமல் வேப்பமரத்தடியில் கதிரிலே காய்ந்து, மழையிலே நனைந்து மிருகமாய் வாழும் கறுப்பாயியைப் பற்றி எழுதுங்கள்! (கரகோஷம்)

நான் எத்தனையோ கதைகளைப் படித்திருக்கிறேன். அவற்றிலே எழுத்துக்கெழுத்து சீர்திருத்தத்தைப் புகுத்தியது வ.ரா.வின் நூல்கள்தான். வ. ரா.வைப்பற்றி எழுதப் பலர் பயப்படுகிறார்கள். ஏனென்றால் அவரும் என்னைப் போல் சந்தேகிக்கப்பட்டவர்! (கரகோஷம்) இதில் ஒரு விஷயம். நாங்கள் ஒரு சாராரால் சந்தேகிக்கப்படுகிறோம்; வ.ரா. இரு சாராராலும் சந்தேகிக்கப்படுகிறார்! (கரகோஷம்)

எழுத்தாளத் தோழர்கள் ஒவ்வொருவரும் காண்டேகராகவும், வால்ட்டேராகவும், வால்ட்விட்மனாகவும் மாற வேண்டும்—ஏன்? வ. ரா. வாக மாறவேண்டும்

உவமை கொடுக்கும்பொழுதும் கற்பனைக்கு எட்டாத விஷயங்களைச் சந்திக்கிழுக்கக் கூடாது. காள மேகத்தைப் போலக் கவி பாடினான் என்று எழுதாதீர்கள்— காளமேகத்தைப் போல ஆக வேண்டுமானால் ஒரு காளி வேண்டும்; அந்தக்காளிக்கு ஒருகோவில் வேண்டும்; அந்தக் கோவிலுக்கு அவன் போகவேண்டும்; போன உடனே காளி பிரசன்னமாக வேண்டும்; பிரசன்னமானதும் வாயைத் திறக்கச் சொல்லவேண்டும்; திறந்த வாயிலே ஈட்டியால் எழுத வேண்டும்! இவ்வளவு சிரமத்தை அவனுக்குக் கொடுக்காதீர்கள். ஏன், நாமக்கல் கவிஞரைப் போல அற்புதமாகப் பாடினான் என்று எழுதுங்கள். ஆண்மையிலே பீமனைப் போல், எழுத வேண்டாம் — அவினாசிலிங்கத்தைப் போல் ஆண்மை வேண்டும், என்று எழுதுங்கள். வியாசரைப் போல் எழுதினான் என்று எழுதாதீர்கள்— தோழர் டி. எஸ். சொக்கலிங்கத்தைப் போல் எழுதினான் என்று எழுதுங்கள். சம்பந்தப்பட்டவன் உடனே புரிந்து கொள்ள இதுதான் சரியானவழி!

(கரகோஷம்) உங்கள் ஏட்டை அழுக்குத் துடைக்கும் 'துடைப்பான்' ஆக்குங்கள்; நாற்றம் எடுக்கும் குப்பைத் தொட்டியாக்கி விடாதீர்கள்.

நான் சில பத்திரிகைகளைப் பார்க்கிறேன். பத்துப் பக்கம் "மூடநம்பிக்கை" என்ற தலைப்பில் **"சோதிடத்தை நம்பாதீர்கள்; அது சுத்தப் புரட்டு; மக்களை அஞ்ஞானக் காரிருளில் ஆழ்த்திவைக்கும் அறியாமை. அதில் ஆழ்ந்து விடாதீர்கள்" என்று வாசாரகோசரமாய் எழுதி விட்டு பதினோராவது பக்கத்திலே, "திருத்தணி ஜோசியர் உங்கள் ஜாதகத்தை அனுப்புங்கள். அற்புதமாகக் கணித்து அனுப்புவார்"** என்றிருக்கும். இது வயிற்றுப் பிழைப்புக்காக என்றால் அவர்கள் வாழ்வதிலும் சாவதுமேல்.

வ. ரா. சொன்னார். "காதல் இல்லாவிட்டால் கதையே இல்லை' என்று. அவரது கருத்து காதல் அதிகம் வரக் கூடாது என்பது. அதுவல்ல உண்மை; பழைய புராணீகர்களிலிருந்து இன்றைய மறுமலர்ச்சி எழுத்தாளர்கள் வரை காதலைப் பற்றி எழுதுகிறார்கள். ஆனால் அவர்களுக்கும் இவர்களுக்கும் ஒரு வித்தியாசம்.

அன்றிருந்தவர் 'ஆரத்தழுவாயோ' என்று ஆரம்பித்தார். தழுவல் காதலிலே பிறக்கிறது! "ஆரத் தழுவாயோ! என்று ஆரம்பித்தால் உலகை மாயையாக்கும் வைதீகக் கூட்டங்கள் அடிக்க வந்துவிடுமே என்று பயந்தார். "அரங்கனே!" என்று முடித்தார்! (கரகோஷம்)

இன்று பகுத்தறிவு ஆக்கம் பெற்றுவிட்டது. எழுத்தாளர்கள் பகிரங்கமாகக் காதலைப்பற்றி எழுதுகிறார்கள்; ஆனால் அதில் பழமை வாடை வீசுகிறது.

"கமலா விதவை; பிராமணப் பெண். நாராயணன் அழகன்; முதலியார் பையன்— இருவரும் காதலித்தார்கள் — கல்யாணம் செய்து கொண்டார்கள். சாதிக் கட்டுப்பாடுகள் உறுமின; தகர்த்தெறிந்தார்கள்" என்று முடியுங்கள் கதையை. (கரகோஷம்) பெயருக்குப் பின்னால் வரும் சாதி வால்களை அறுத்தெறியுங்கள்.

'உலகம் மாயை" என்பவர்கள் உங்கள் பார்வையிலே விழட்டும். உலகம் மாயையல்ல. மாய உலகத்தில் மந்திரிகள் இருக்க மாட்டார்கள்! (கரதோஷம்) மாய உலகத்திலே நாமக்கல் கவிஞர்கள் இருக்கமாட்டார்கள்! மாய உலகத்திலே காதல் இருக்காது. மாய உலகத்திலே நீங்களும் நானும் இருக்க மாட்டோம்!

இறுதியாக ஒன்று கூறுகின்றேன்! "வீழ்ந்திருக்கும் சமுதாயம் வீறு கொண்டெழ, சுரண்டுவோர் ஒழிய சமத்துவம் நிலவ உங்கள் பேனாமுனை, வாள் முனையாகட்டும்! (பலத்த கரகோஷம்)"

அண்ணாத்துரை அமர்ந்தார். கனம் அவினாசிலிங்கம் ஓடிவந்து கைகொடுத்தும் கட்டிக் கொண்டார்!

அதோடு காலை நிகழ்ச்சிகள் முடிவுற்றன. சுமார் 1 மணிக்கு அங்கேயே திவ்யமான சாப்பாடு. கறிகூட நன்றாக நினைவிருக்கிறது! உருளைக் கிழங்குக் கூட்டு; வாழைக்காய்ப் பொறியல்; நல்ல அரிசியில் வடித்த சாதம்—!

பிற்பகல் சுமார் மூன்று மணிக்கு மந்திரி கனம். பக்தவத்

சலம் தலைமையில் பத்திரிகைக் கண்காட்சி ஆரம்பமாயிற்று. அவரது பேச்சுக்குப்பின் ராவ்பகதூர் ப. சம்பந்த முதலியார் அவர்கள் பேசினார்கள். தமது அனுபவத்தையும் சினிமாப் பத்திரிகைகள் விளம்பரத்திற்காக விமர்சனம் எழுதுவதையும் கண்டித்தார். அதன் பின் பேசிய சுதேசமித்திரன் ஸி. ஆர். சீனிவாசன் பேச்சில் குறிப்பிடத்தக்க அம்சம் எதுவுமில்லை.

சி. ஆர். ஸ்ரீனிவாசன் பேச்சு முடிந்ததும், ரா. நா வந்தார். மாலை விஷயாலோசனைக் கமிட்டி கூடுமென்றும், அதற்காக—அந்தக் கமிட்டிக்காக எடுக்கப்பட்டிருக்கும் எழுத்தாளர்கள்அவசியம் வந்து சேர வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டு, அவர்கள் பெயரை வாசித்தார். எந்தக் கூட்டத்திலும் பிரேரேபணை, ஆமோதிப்பு என்னும் இரண்டு நிகழ்ச்சிகளோடுதான் தலைவரோ மற்றும் அங்கத்தினர்களோ தேர்ந்தெடுத்தல் நடைபெறும். ஆனால், நண்பர் ரா. நா. பார்லிமெண்டரி முறையைக் கூட கை கழுவிவிட்டு, தான் பொறுக்கியெடுத்த சிலரைமட்டும் விஷயாலோசனைக் கமிட்டியில் சேர்த்திருந்தார். அவருக்குப் பாசுவம் முத்துசாமியுப் கமிட்டியில் இருந்தால் போதும். போதாக் குறைக்கு "சாவி" என்றொருவரையும் எடுத்திருந்தார். (நல்ல "மணி"யாக ஒருவரை எடுக்கக் கூடாதா?) மாநாட்டிலே நடந்த தவறுகளில் இது ஒன்று.

அன்று மாலை விஷயாலோசனைக் கமிட்டி கூடிற்று தோழர் சுப. நாராயணனைக் கமிட்டியில் சேர்க்காமல் விட்டுவிட்டார்கள். ஆனாலும் அவர் இடையிடையே கலந்து கொண்டு சூடாகப் பேசியது. எனக்கு மிகுந்த திருப்தியை அளித்தது. கட்டுரை எழுதுவதில் சிறப்பு வாய்ந்த தோழர். நாராயணன். ஆள் பார்ப்பதற்கு ஒல்லியாக இருந்தாலும், உறுதியான நெஞ்சம் படைத்தவர் என்பதை அப்பொழுதுதான் தெரிந்து கொண்டேன்.

"பொருள் களஞ்சியம்" தயாரிப்பதற்காகப் பொறுக்கப்பட்ட குழுவில் டாக்டர் வே. நாராயணன் என்பவரையும் எடுத்திருந்தார்கள். அதை ஆட்சேபிக்குமுகத்தான், நண்பர் நாராயுணன் அவர்கள் சொன்ன காரணம் 'ரொம்ப சரி'யாக இருந்தது. தமிழ் வார்த்தைகள் பலவற்றை சமஸ்கிருதத்துக்கு சுவீகாரம் செய்து கொடுக்கும் ஒரு 'ஐந்தாம் படையை தமிழ் அகராதி தயாரிக்க எடுத்தால், கட்டுச் சோற்றில் வெருகை வைத்துக் கட்டியது' போலத்தான்!

முதலில் அகராதிக்கு, 'சகல கலா விளக்க அகராதி' என்று பெயர் கொடுப்பதாய் முடிவு செய்தார்கள். அதைத் திருத்தி, நண்பர். நாராயணன், 'பொருட் களஞ்சியம்' என்று பெயர் தந்தார். இடையில் நண்பர். கண்ணதாசன் ஒரு வேடிக்கை செய்தார் 'சகல கலா விளக்க அகராதி' என்பதற்குப் பதிலாக, 'அகில விஷயச் சுமைதாங்கி' என்று வைக்கலாமே!" என்றார்.

ஆமாம்; அதைக்காட்டிலும் இது நன்றாயிருக்கும்' என்றார் தோழர். ஸி. எம். ஜனார்த்தனம்!

பின்னர் அங்கு எழுத்து மூலமாக வந்திருந்த தீர்மானங்கள் ஒவ்வொன்றாகப் படிக்கப்பட்டன ஆட்சேபணைகள், ஆதரவுகள் எல்லாம் மறுநாள் பொதுக் கூட்டத்திற்கு வரலாம் என்னும் 'அபய'த்தின்மீது சப்தம் கொஞ்சம் குறைந்தது.

(33-ம் பக்கம் பார்க்க)

நல்வாழ்த்துக்கள்

Phone : 617693 A GOPALAKRISHNAN
PRESIDENT

நகைகளின் பேரில் வட்டிக்குப்
பணம் கொடுக்கப்படும்

வட்டி விதம் 18%

※

முதலீடு ஏற்றுக் கொள்ளப்படும்
வட்டி 14% + 1% தரப்படும்

CITY WEST BENEFIT
FUND LTD.,

23, M. T. H. ROAD, PADI.
MADRAS - 600 050.

சிகப்பு விளக்கு

கவிஞர்
அனு.வெண்ணிலா
பி.லிட்.,

சீரழிய நினைத்திருந்தா இந்தச் சித்திரங்கள் விலையாச்சு;
யாரழிய வைத்தார் இப்பெண்மயில்கள் வாழ்வுதனை,
ஊரறிய உலகறிய உவந்தொருவன் துணையாகி
பாரறிய வாழவந்த பாங்குடைய குலமகளை.
சிவப்பு விளக்கடியில சிதைத்திடவும் துடித்திடவும்
உவர்ப்புக் கடலுக்குள் ஊறவைத்த பாவிகள் யார்?
கன்னிச் சிலைகளுமே களங்கத்தில் நனைந்திட்டு
குன்றி அழுகின்ற கொடுமைகளைச் செய்தது யார்?
பெண்ணைப்பெருந் தெய்வமென பேசுகின்ற இந்நாட்டில்—
அவர்
வண்ணச் சிறகுகளை ஓசையின்றி ஒடித்தது யார்?
தான் செய்யாத் தவறுக்குத் தந்தைதாய் புறக்கணிக்க;
ஏன் இன்னும் வாழுகின்றோம் என்றுமனம் வெந்து நிற்க
வான் போன்ற துயரத்தை வண்ணப்புறா சுமந்து நிற்க
மான் போன்ற பிள்ளைமனம் மரணத்தை வேண்டிநிற்க
இக்கொடுமை செய்திட்ட ஈரமிலாப் பாவியரை
அக்கக்காய் உடல் வெட்டி ஆகாசப் பறவைகட்கு
விருந்திடுவோம்!
பஞ்சு மனம் வேகவைத்த பாவியுடல் வேகட்டும்
கொஞ்சுமொழி பேதைமனம் கொஞ்சமேனும் ஆறட்டும்!

அறிவியலும் நம்பிக்கையும்

வ. அலமேலு, எம்.ஏ., எம்பில் (பிஎச்டி)
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை.

எங்கும் எதிலும் அறிவியல் கூறுகளே நிறைந்து காணப்பெறும் நிலையினது இன்றைய காலக்கட்டம். எந்தத் துறையையும் அறிவியல் கண்கொண்டு நோக்கும்பொழுது, புதிய பாதைகளைத், திருப்பங்களைத் தவறாது காண முடிகிறது. செழிப்பின்றி இருந்த பல துறைகள் அறிவியல் பார்வையினால் தழைக்கின்றன. அதன் விளைவுதான், மனித வாழ்வின் முன்னேற்றம்.

அறிவியலால் உருப்பெறும் எந்தக் கருவியும் செயலும் பயன்படுத்துவோரின் மனநிலைக்கேற்பவே நன்மை, தீமைகளை விளைவிக்கும். எனவே அறிவியல் சாதனையான அணுகுண்டு தயாரித்தல், ஒற்றுமையைக் குலைக்கும் அழிவுப் பாதைக்கு அழைத்துச் செல்லும் தன்மையது என்று எளிதாகக் கூறிவிட முடியாது. அது பயன்படுத்துவோரின் மன இயல்பே தவிர, அணுவின் தோற்றம் பலப்பல நன்மைகள் புரிந்தமையை அறிவியல் பூர்வமாக உணரத்தான் செய்கிறோம். அழிவிற்கு மட்டுமன்றி ஆக்கத்திற்கும் பயன்படக் கூடியது.

இம்முறையில், பயன்பாட்டிற்குப் பெரிதும் துணைபுரியும் அறிவியல் கூறுகள் இன்று, நேற்று தோன்றியவை அல்ல, மக்கள் தோன்றி அவர்களிடத்து நம்பிக்கை உருப்பெற்ற காலத்தே தோற்றம் பெற்றுவிட்டன. இன்றைய அறிவியல் கருத்தோடு ஒப்பு நோக்கினால் அறிவியலின் தோற்றம் பற்றி அறிவதோடு நம்பிக்கை, அறிவியலோடு இணைந்துள்ள முறையையும் அறியமுடியும்.

ஒப்புநோக்கிப் பகுத்து ஆய்ந்து காணும் இயல்பு இல்லாததால், இன்றைய அவசர நிலையில் எதையும் எளிதில் செய்து முடிக்கும் துடிப்புக் கொள்கிறோம். பெரியோர்களின் மரபுவழிச் செயல்களை உணர்ந்து தெளிவு பெற மறுக்கிறோம்-மறக்கிறோம் அவற்றை மூட நம்பிக்கைகள் என்று கூறித் தவறான பாதையை வகுத்துக்கொண்டு வழி தெரியாமல் தவிக்கவும் செய்கின்றோம்.

நம்பிக்கை

நம்பிக்கை வேறு, மூடநம்பிக்கை என்பது வேறு. எனவே நம்பிக்கைகளை மூடநம்பிக்கைகள் என்று தவறாகக் கருதிவிடக் கூடாது.

"நம்பிக்கைகளும் பழக்க வழக்கங்களும் தோன்றக் காரணம் வாழ்க்கைத் தேவை அல்லது அச்சம் ஆகியவையே ஆகும். நாளடைவில் சடங்குகள் தோன்றியதற்கான காரணங்கள் மறையவே—அது தேவையில்லை என்ற நிலையும் ஏற்படும்போது அவை மூட நம்பிக்கைகள் என கேலி செய்யப்படுகின்றன.

மேலும்.

"நம்பிக்கைகள் காரணக் காரியத் தொடர்புகளுக்கு உட்பட்டவையாகும், காரணக் காரியத் தொடர்புகட்குட்பட்டுச் சான்றுகளின் வாயிலாக நிறுவ முடிவதை நம்பிக்கை என்றும் சான்றுகளின் அடிப்படையிலோ அல்லது காரண காரியத் தொடர்பின் வாயிலாகவோ விளக்க முடியாதவற்றை மூடநம்பிக்கை என்றும் வகைப்படுத்துவர்"2

இவற்றின் வழி, நம்பிக்கைக் குறித்து ஓர் முடிவிற்கு வரமுடிகிறது. அதாவது அறிவியலோடு ஒப்புநோக்கி ஆய்ந்து அறிவியலோடு பொருந்தும் விடை காணுமிடத்து அது நம்பிக்கையாகவும் அல்லாவிடத்து மூடநம்பிக்கையாகவும் கொள்ளலாம் என்பதாகும்.

"ஒரு சமுதாயத்தின் நம்பிக்கைகளைக் கொண்டு அச்சமுதாயத்தின் அறிவுத்திறனை அளவிட இயலும். சிந்தனைத் திறன் குறைந்த சமுதாயத்தில் நம்பிக்கைகள் குறைவாகவும் சிந்தனைத் திறன் குறைந்த சமுதாயத்தின் மூடநம்பிக்கைகள் மிகுதியாகவும் காணப்படும்"3

என்னுங் கருத்தும் நம்பிக்கை, மூடநம்பிக்கை ஆகியவற்றின் வேறுபாட்டினை விளக்குகிறது. மேலும், ஏதேனும் ஒரு செயலை, ஒரு சமுதாயத்தின் நம்பிக்கை தான், மூடநம்பிக்கை அன்று என்று தேர்வு செய்வதற்கு பின்வரும் மூன்று கூறுகள் துணைபுரிகின்றன.

1. சந்தேகித்தல்
2. நம்பிக்கை பற்றிய கருத்து
3. நம்பிக்கை பற்றி முடிவெடுத்தல்.

மூடநம்பிக்கை

மூடநம்பிக்கை என்பது எது என்று நோக்குமிடத்து இரண்டிற்குமான வேறுபாட்டினை அறியமுடியும், மூடநம்பிக்கை என்பது,

1. அறிவியலின் துணைகொண்டு நிரூபிக்க முடியாது.
2. ஒருசில, எதிர்பார்ப்பிற்கு ஏற்ப நடக்கும் ஒருசில நடக்காது
3. சிலரால் ஏற்கப்பட்டும் பலரால் மறுக்கப்பட்டும் அமையும்;
4. பெரும்பாலும் அற உணர்வை வலியுறுத்துவனவாகவே இருக்கும்,
5. மன அமைதிக்குப் பெரிதும் வழிவகுப்பதாய் அமையும்.
6- அச்சத்தின் காரணமாகத் தோன்றியதாக இருக்கும்.

இவற்றிற்கான சான்றுகளாவன:

1. விதவை எதிர்வரின் தீய சகுனம்
2. காகம் கரைந்தால் உறவினர் வருவர்
3. வலது கண் துடித்தால் ஆணுக்கும் இடது கண் துடித்தால் பெண்ணுக்கும் நலம் பயக்கும்.

என்பன ஒரு சிலரால் மட்டுமே

ஏற்கக்கூடியன. சில நேரங்களில் நடக்கும்; பல நேரங்களில் தவறும்.

1. திருமணம் ஆன பெண் கையில் வளையல் அணிதல் வேண்டும்.

2. திருமணமான பெண் முதன் முதலாகச் செல்லும்பொழுது, புகுந்தவீட்டில் வலது காலை எடுத்து வைத்துச் சென்றால் குடும்பம் செழிக்கும்.

3. குழந்தைக்குக் காது குத்துவதால் எமன் நெருங்கமாட்டான்.

என்பன மன அமைதிக்கு வழி வகுப்பன.

1. ஒருவர் தலையில் வைத்த பூவை மற்றவர் வைக்கக்கூடாது, (தலையில் உள்ள கிருமிகள் பரவுதலே காரணம்.)

2. இரவில் குப்பைகளை வெளியே கொட்டுதல் கூடாது. (கண்ணுக்குத் தெரியாத நிலையில் தேவையான பொருள்கள் சில நம்மைமீறி வெளிச் சென்று விடுவதே காரணம்)

3. உணவு உண்ணும்பொழுது விளக்கினை அணைக்கக்கூடாது. (இருட்டில் பல்லி, பூச்சிகள் பல உணவில் விழ நேரும் என்பதே காரணம்)

4. கணவன் பெயரைமனைவி கூறுதல் கூடாது. (கணவனை மனைவி மதித்திருத்தல் வேண்டும் என்பதே காரணம்)

என்பன அறிவுரை கூறும் பாங்கின.

1. பெண்கள் கூந்தலை விரித்துப் போடக் கூடாது

2. விளக்கு வைத்தப்பின் கொல்லைப்புறக்கதவு திறந்திருக்கக் கூடாது.

எனுமிவை அச்சத்தின் பாற்பட்டவை.

இவற்றை, ஒட்டுமொத்தமாக நோக்கும்போது, மனிதமன உணர்வுகளின் வெளிப்பாட்டினையே அறியமுடிகின்றது.

"உளவியலார், மூடநம்பிக்கையை மனிதனது மன நலத்திற்கும் சமுதாயத்தின் கட்டுக் கோப்பிற்கும் இன்றியமையாத ஒன்றாகக் கருதுவர்"

எனும் கருத்து ஏற்புடையதா என்று சிந்தித்துப் பார்க்க வேண்டியுள்ளது.

அறிவியலும் நம்பிக்கையும்

" அளந்ததோர் குழியின்
மண்ணை அகழ்ந்து அதன்
மேலேயிட்டால் வளர்ந்திடிற்
செல்வ முண்டாம் ஒத்திடில்
மிகுதியில்லை குளந்தனில்
கரையு மாகிற் குறைந்திடும்
சம்பத்து அன்றே உளந்தனில்
கருதி நல்லோர் உரைத்தனர்
புவியின் மாதோ " 6

என்னும் மனைநூல் பாடல் வீடு கட்டத் தொடங்குவோர் முதலில் அந்த வீட்டு மனையில் ஒரு பக்கத்தில் குழி எடுத்தல் வேண்டும். அதில் மாலையில் நிறைய நீர் விட்டு வைக்க வேண்டும். மறுநாள் காலையில் பார்க்கும்போது அந்த நீரில் சிறிதளவு மிஞ்சியோ சிறிது சேறாகவோ இருந்தால் செல்வம் உண்டாகும் என்கிறது.

இதேபோல், அக்குழியில் வெட்டி எடுத்த மண்ணை மீண்டும் கொட்டி மூடினால் மண் மிஞ்சி இருந்தால் செல்வமுண்டாகும் என்ற நம்பிக்கையில் இச் செயலைச் செய்து பார்ப்பது உண்டு என்பதை,

"நிறையநீர் இட்டு வைத்து
நீள்கதிர் எழுந்தபோது முறை
மையாய் வந்து பார்த்தால்
முப்பிடி நீரே நன்றாம் தரை

யினில் வற்றியக்கால் தாழ்வுற;
பிளக்கும் ஆகில் சிறையொடு
நோயாம் என்று தெரிந்தவர்
உரைத்த வாறே " 7

எனும் இப்பாடல் உணர்த்துகிறது. இரண்டு செயல்களும் நம்பிக்கையின்பாற் பட்டவை. இவற்றால், வீடு கட்ட தேர்ந்தெடுக்கும் மனை கெட்டியான மண்ணை உடையதாக இருத்தல் வேண்டும்- என்னும் அறிவியல் உண்மை புலப்படுகிறது. கெட்டியான மண்ணே நீர் நெடிது நேரம் தேங்குவதற்கும் எடுத்த மண் மீண்டும் நிரம்பும்போது மிகுதியாவதற்கும் உரியதாகிறது. மண் கெட்டியாக இல்லையானால் நீர் ஊறிவிடுவதும் மீண்டும் நிரம்பும்போது குறைவதும் இயல்பு. வீடு கட்டும்பொழுது மேலே சுமை ஏற ஏற அடித்தளம் கீழே இறங்கி கட்டிய வீடு பாழாகக்கூடும். இந்த, அறிவியல் கருத்துக்களைச் செல்வம் பெருகுமென்றும் தாழ்வு உறும் என்றும் மக்களுக்கு ஏற்படும் நன்மை தீமைகளைச் சுட்டுவதன் மூலம் மக்களுக்கு உணர்த்துசிறார்கள்.

2. " இயற்றுவட கீழ்திசை
யடுக்களை யமைப்பாம்

பயிற்றப்பட மொழிந்தபடி
பார்த்திடுதல் நன்றே " 8

என்னும் பாட்டு, வீட்டில் வடகிழக்குப் பகுதில் அடுக்களை அமைத்தல் வேண்டும் என்று கூறுகிறது. இதுவும் அறிவியல் கருத்தை உட்கொண்டது. சமைக்கும் அறையிலிருந்து வெளியேறும் புகை முதலியன மிக வேகமாக வீசும் வாடைக் காற்றுப் போன்றவற்றால் வீட்டினுள் புகாது என்ற உட்கருத்தைக் கொண்டது.

3. " வடக்கே தலை வைத்துப் படுக்கக்கூடாது " என்பர். இதனை அறிவியற் கண்கொண்டு ஆராயும்போது, நம் உடலில் உள்ள எலக்ட்ரோ மாக்னெடிக் அலைகளில் மூலஸ்தானம் மூளை உலகின் மாக்னெடிக் அலைகளில் மூலஸ்தானம் வடதுருவம். எனவே, வடக்கே தலைவைத்து படுக்கும்போது இரண்டு காந்த சக்திகளும் (மூளையின் காந்த சக்தி - உலகின் காந்த சக்தி) மூளைக்குப் பாதிப்பினை உண்டாக்கிவிடுகின்றன. என்னும் அறிவியல் உண்மை தெரியவருகிறது. ஆனால் பூஜை, தியானத்தின்போது வடக்கு நோக்கி அமர்தல் வேண்டும். காரணம்,

" தூக்கத்தில் புத்தியும் மனசும் நமக்கு வசப்படுவதில்லை, உடலில் சோர்வில் அவைகளைத்து ஒடுங்கிவிடுகின்றன. அப்போது புத்தி வசத்தில் இல்லாது பேதலித்த நினைவுகளைக் காண்கிறோம். இம்மாதிரி சமயத்தில் சின்ன காந்தம், பெரிய காந்தத்துக்கு நேரேபிடிப்பது தாறுமான விளைவுகளை ஏற்படுத்திவிடும். ஆனால் ஜெபம், தியானம் இவற்றைச் செய்யும்போது நாம் மனத்தை வசப்படுத்த முயலலாம். அதில் முழு க்வெற்றி இல்லாவிட்டாலும், லட்சியமும் கட்டுப்பாடுமாவது நமக்கு அப்போது இருக்கிறது " 9 என்பதே.

4. " அருந்ததி பார்த்தல் " என்பது, திருமணச்சடங்கில் ஒரு கூறு. இதற்கும் விஞ்ஞான ரீதியில் ஆதாரம் காணப்பெறுகிறது. விண்மீன்கள் குறித்த இன்றைய ஆய்வின்வழி, அருந்ததி என்ற விண்மீன், இரண்டு வேறு வேறு விண்மீன்களின் தொகுப்பு, ஆனால் அவற்றைச் சாதாரண கண்கொண்டு பார்க்கும்போது ஒரே விண்மீனாகத் தோன்றும். இந்தப் பெரிய அறிவியல் உண்மையைத்தான் முன்னோர்கள்,

“அருந்ததி உண்மையில் இரு விண்மீன்கன்னி தொகுப்பினாலும் பார்ப்பதற்கு ஒன்றாகவே தோன்றுவதுபோல் நீவீரும். என்றென்றும் உடலால் இருவராகத் தோன்றினாலும் உள்ளத்தால் ஒருவராகவே வாழவேண்டும்”[10] என்று கூறுவதன்வழி திருமணச் சடங்காக்கியுள்ளனர்.

5. “மழைக் காலத்தில் இடி இடிக்குஞ்சமயத்து, தாய்க்கு முதல் குழந்தை வெளியே செல்லக் கூடாது” என்பர். இதனைக் கேட்கும் அனைவரும் எள்ளிநகையாடவே செய்வர். ஆனால் இதனுள்ளும் அறிவியலின் பாதிப்பு இருக்கத்தான் செய்கிறது. தலைப்பிள்ளைகளின் மண்டை ஓட்டில் மட்டும் ஒருவித காந்தசக்தி இருக்கிறது. இந்த காந்த சக்தியால் விண்ணில் ஏற்படும் இடியானது, ஈர்க்கப்பட்டு அவர்களின் தலையில் விழ வாய்ப்பிருக்கிறது. இது போன்ற நம்பிக்கைகள், பல அறிவியலோடு இணைந்திருக்கின்றன

6. “அகன்ற நெற்றியுடையவர் அதிக அறிவுடையவர்”என்பதும் ஓர் நம்பிக்கையே, காரணம், அதிக அறிவுடையோர் அதிகமாகச் சிந்திப்பர். சிந்தனை அதிகரிக்க அதிகரிக்க உஷ்ணம் அதிகரிக்கிறது. முடி கொட்டுகிறது. விளைவு நெற்றி அகலமாகிறது.

7. “கிரகண காலத்தில் கர்ப்பிணிகள் அசையக் கூடாது” என்பர். காரணம், பௌதீக மாற்றம் அதிக அளவில் நிகழும் என்பதே. இதனோடு ஒத்த கருத்துடைய நம்பிக்கையே,

8. “அமாவாசையில் நோய்கள் அதிகரிக்கும்” என்பது. அதாவது, “அமாவாசை தினத்தில் சூரியனும் சந்திரனும் பூமியுடன் நேர்கோட்டில் அமைந்திருப்பதால், சந்திரனின் ஈர்ப்பு விசையோடு சூரியனின் ஈர்ப்பு விசையும் சேர்வதால், கிரகங்களில் வழக்கத்திற்கு மாறான எதிர் விளைவுகள் ஏற்படுகின்றன”[11] பெரும்பாலோர் இத்தினத்தில் சுப காரியங்கள் செய்யவும் தயங்குவர்.

மேலும் சில நம்பிக்கைகளாக,

1) அம்மை நோயிற்கு வேப்பிலையைப் பயன்படுத்தும் முறை தொற்றுநோய் மருத்துவமனைகளில் இன்றும் நடைமுறையிலிருப்பது. 2) குழந்தை வேண்டி அரசமரம் சுற்றுதல், 3) இடுகாடு, குழந்தைப் பிறப்புச் சடங்குகளில் கலந்து கொண்டு திரும்புவோர் மீது மஞ்சள் தெளித்தல், 4) புத்தாடைகளை அணிந்து கொண்டு உறங்குதல் கூடாது என்று கூறுதல் போன்ற விளங்குகின்றன.

இவற்றைத் தொகுத்துக் காணும்போது நம்பிக்கை அறிவியலின் பாற்பட்டது. அதாவது, நம்பிக்கையும் அறிவியலும் ஒன்றுடன் ஒன்று இணைந்தவை என்பதை அறியமுடிகிறது.

ஆனால், மூடநம்பிக்கை அறிவியலின்று தனித்து நிற்பது, வேண்டுமானால் ஒரு சில மூட நம்பிக்கைகள் அறிவியலின் வளர்ச்சிக்குத் துணை புரிந்தன என்று கூறலாம்.

“ஆவி உலகத்திலே அன்றைய மனிதனுக்கு நம்பிக்கையிருந்தது. அதனால் இறந்தவர் உடல்களைத் தைலங்கள் பூசி அவர்களுக்கு வேண்டிய பொருள்களுடன் பெட்டிகளிலோ அல்லது நிலத்திலோ பாதுகாப்பாகப் புதைத்தனர். அதன் விளைவாக எலும்புகள் மிஞ்சின”[12] அவை, இன்று நமக்கு மருத்துவ இயலுள் ‘Artho’ எனப்பெறும் எலும்பு பற்றிய பாடத்தினை முறைப்படி அறிய உதவின.

இவ்வாறு ஒரு சிலவே, கொண்டு கூட்டிப் பொருள் கொள்வதன்வழி அறிவியலுடன் தொடர்பு கொள்கின்றன.

முடிவுரை

பெரும்பாலானவை மூடநம்பிக்கைகளாக இருப்பதால் நம்பிக்கையின் சிறப்பு குன்றிவிட்டது. நம்பிக்கையை இனம் பிரித்துஅறிதல் வேண்டும். எனவே அறிவியல் நோக்கோடு அறிந்து விடை காணுமிடத்து அது நம்பிக்கையாகவும் அல்லாவிடத்து மூடநம்பிக்கையாகவும் கொள்ள வேண்டும். மேலும்

“இன்றைய மனிதன் தன்னையும் நம்புவதில்லை, பிறரையும் நம்புவதில்லை, கடவுளையும் நம்புவதில்லை. பகுத்தறிவு பகுத்தறிவு என்று கூறிக் கொண்டு சந்தேகக் குட்டையில் தாழ்ந்துவிட்டான்”[13] என்ற கூற்றையும் சிந்தித்துப் பார்த்தல் நலமிக்கது.

அடிக் குறிப்பு

1. நாட்டுப்புற இலக்கியம் நலந்தரு விளக்கம் ப. 227 2. தமிழர் பழக்க வழக்கங்களும் நம்பிக்கைகளும், ப. 106. 3. மேற்படி, ப. 105. 4. திருக்குறளுக்கு உரைகள் வேண்டுமா ப. 14 5. பண்டைத்தமிழர் வாழ்வும் வழிபாடும் ப. 44. 6. மனைநூல், பா. 62. 7. மேற்படி, பா. 52 8. மேற்படி, பா. 403, 9. நாட்டுப்புற நம்பிக்கைகள், ப. 22. 10. மேற்படி ப. 22. 11. மேற்படி, ப. 51. 12. மரபும் சூழ்நிலையும், ப. 30. 13. நாட்டுப்புறப்பாடலும் பண்பாடும், ப. 61

இந்தியில் தமிழ்க் கவிதை

பாரதிய ஞானபீடம் பதினான்கு இந்திய மொழிகளில் உள்ள சிறந்த கவிதைகளைத் தேர்வு செய்து அவற்றை இந்தியில் மொழி பெயர்த்து வெளியிட்டுள்ளது.

ஒவ்வொரு மொழியிலும் ஐந்து சிறந்த கவிதைகளைத் தேர்வு செய்து “பாரதீய கவிதாயேன்” என்னும் தலைப்பில் 227 பக்கங்களில் கவிஞர்களின் வாழ்க்கைக் குறிப்போடு அண்மையில் சிறப்பாக வெளிவந்துள்ளது. தமிழ்மொழியிலிருந்து நேர்வு செய்த ஐந்து கவிதைகள் இந்நூலில் மொழிபெயர்த்து வெளியிடப்பட்டுள்ளன.

முத்தமிழ்க் கவிஞர் ஆலந்நூர் கோ. மோகனரங்கன் எழுதிய “மனிதனைத் தீண்டாதான் மனிதனா?” என்னும் தலைப்பில் 144ஆம் பக்கத்தில் உள்ள “இன்னும் பாடுவேன்” என்ற கவிதை தேர்வு செய்யப்பட்டு இந்தியில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. மேலும் நம் தமிழ்நாட்டுக் கவிஞர்கள் திருச்சி பாரதன், நா. பார்த்தசாரதி, இரா. மயில்சாமி, பி. ராசன் முதலியோர் கவிதைகளும் இத்தொகுப்பில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. இதன் விலை ரூபாய் 75.

நீதிபதி மயிலாடுதுறை வேதநாயகர்

கெ. பக்தவத்சலம்

(செயலாளர், ஒய்.எம்.சி.ஏ., பட்டிமன்றம், சென்னை)

(முத்தமிழ்த் துறையின் முறை போகிய உத்தமக் கவிஞராகவும், உரைநடை வளர்த்த உரவோராகவும் ஒளிபெற்றுயர்ந்த வித்தகர் வேதநாயகர் மறைந்த நூற்றாண்டு நிறைவைத் தமிழ் மறுமலர்ச்சிக்கு வழிகாட்டும் விழாவாக, 23—4—1990 ஆம் நாள், திருச்சிராப்பள்ளித் தமிழ்ச் சங்க அரங்கில், தமிழக அரசு விழா வெடுத்துச் சிறப்பித்தது. மாண்புமிகு கல்வி அமைச்சர் பேராசிரியர் க. அன்பழகன் அவர்களும், அறிஞர் பெருமக்களும், வேதநாயகரின் விழுமிய தமிழ்த் தொண்டை வியந்து பாராட்டினர்.

துறைதொறும் தமிழ் துலக்கிய தோன்றல், தன்னேரிலாத் தமிழ் வேதநாயகரை, 'இளந் தமிழனும்' இணக்கமுடன் புகழ் வணக்கம் செலுத்திப் போற்றுகிறது. —ஆசிரியர்.)

நீதிபதி வேதநாயகர்

பத்தொன்பதாம் நூற்றாண்டில் பாட்டாலும், உரையாலும் பைந்தமிழ் வளர்த்த வித்தகர் வரிசையில், மயிலாடுதுறை வேதநாயகரின் திருப்பெயர் முன்னணியில் விளங்குகிறது.

நீதிபதி வேதநாயகர்

முனிசீப் எனும் முறை மன்ற நடுவராக பணியாற்றிச் சிறந்தவர். இவர் தொழிலாற்றிய துறை வேறு. தொண்டாற்றிய துறை வேறு.

தமிழ் மொழியில் வெளிவந்துள்ள முதல் புனை கதையாகிய 'பிரதாப முதலியார் சரித்திரம்' என்னும் நெடுங்கதையை எழுதிப் புகழ் பெற்றுப் பொலிந்த 'புதுத் தமிழ் முன்னோடி'.

சமயப் பொறையுடன், எல்லாச் சமயத்தினரும், எக்காலத்தும் பாடி மகிழதற்கேற்ற, 'சர்வ சமய சமரசக் கீர்த்தனங்கள்' என்னும் தலைப்புடைய இசைப் பாடல்களை இயற்றி, இசைத் தமிழுக்கு இனிமை சேர்த்த மேதை.

பெண் கல்வியின் இன்றியமையாமையைச் சென்ற நூற்றாண்டிலேயே உணர்ந்து வற்புறுத்திய விற்பன்னர். பெண்ணின் பெருமையு[illegible] உரிமையை ய[illegible] மாலை' [illegible] கல்வி', 'பெண்மானம்'

193681

என்னும் மூன்று நூல்களைக் கருத்தூன்றி எழுதிய பெருந் தகை.

நீதிபதிப் பொறுப்பிலிருந்து ஓய்வு பெற்ற பின்னர், மயிலாடு துறை நகர் மன்றத் தலைவ ராகத் தேர்ந்தெடுக்கப் பெற்று நிகரில்லாப் பொதுத் தொண் டாற்றிய நேர்மையாளர். அக் காலத்தில் தாது-ஈசுவர ஆண்டு களில், நிலவிய கொடும் பஞ்சத் தின்போது, நகரெங்கும் கஞ்சித் தொட்டிகள் அமைத்து, ஏழை எளியவர்களின் பசிப் பிணியைத் தணிக்கச் செய்த தண்ணளி யாளர். இப் பணியைக் கண்டு நெகிழ்ந்தஇசைத் தமிழ்க் கவிஞர் கோமான் கோபாலகிருட்டிண பாரதியார், 'நீயே புருஷ மேரு' என்று வேதநாயகரை வியந்து பாராட்டியுள்ளார்.

உருக்கத்தின் பெருக்கத்தைக் காட்டும் சிற்றிலக்கியங்கள் சில வும், நகைச்சுவை நனி சொட் டச் சொட்டப் பாடப் பெற் றுள்ள தனிப் பாடல்கள் பலவும், வேதநாயகரின் விழுமிய புலமை நலத்திற்குச் சான்றாக இன்றள வும் நிலைத்து நின்றுள்ளன.

தோற்றம்

திருச்சிராப்பள்ளியை அடுத் துள்ள குளத்தூர். வேதநாயகர் பிறந்த ஊராகும். இவ்வூரில் வாழ்ந்திருந்த கத்தோலிக்கக் கிறித்துவ சமயத்தைச் சார்ந் திருந்த வேளாண் செல்வர் சவரி முத்து என்பாருக்கும், ஆரோக்கிய மரியம்மையாருக்கும் நன்மக னாக, 1826ஆம் ஆண்டு, அக்டோ பர் திங்கள் 11ஆம் நாளில் வேத நாயகர் பிறந்தார்.

கல்வி

தென் மாநில நீதிமன்றத்தின் மொழிபெயர்ப்பாளராக விளங்



கிய திரிசிரபுரம் தியாகப் பிள்ளை என்பவரிடம், வேதநாயகர் ஆங் கிலத்தோடு அருந்தமிழும் பாங் குறப் பயின்றார். கல்வியறிவோடு கனிவான கவிதை பாடுந் திறத் தையும் இளமையிலேயே இனிது பெற்றார்.

தொடக்கத் தொழில் :

திருச்சிராப்பள்ளியிலிருந்த தென் மாநில நீதிமன்றத்தில் நீதிமன்ற ஆவணப் பாதுகாவல ராக வேதநாயகர் தம் இருபதாம் வயதிலேயே நியமனம் பெற்றார்

பின்னர் திருச்சி மாவட்ட நீதி மன்றத்தில், 1850ஆம் ஆண்டிலி ருந்து மொழி பெயர்ப்பாளராக மாற்றம் பெற்றார்.

சான்றோர் நட்பு :

நீதிமன்ற மொழிபெயர்ப்பாள ராக வேதநாயகர் விளங்கிய காலத்திலேயே, திருச்சிராப்பள்ளி யில் வாழ்ந்திருந்த மகா வித்து வான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை என்ற புலவர் பெருந்தகையுடன் நெருங்கிப் பழகும் நல்வாய்ப் பினைப் பெற்றார்.

மீனாட்சி சுந்தரனார் வாயிலா கத் திருவாவடுதுறை ஆதினத் தலைவராக விளங்கிய மேல கரம் சுப்பிரமணிய தேசிகர் அவர்களுடனும் அன்புரிமை யோடு பழகும் அரியவாய்ப்பினை யும் பின்னர் வேதநாயகம் பெற் றார். வாழ்நாள் முழுதும் தாம் மேற்கொண்ட விழுமிய தமிழ்த் தொண்டு செழித்து வளர, இவ் விரு பெரியாரையும் வேதநாயகர் துணையாகக் கொண்டார்.

நீதிபதி :

1857ஆம் ஆண்டு, முறைமன்ற நடுவர் தேர்வெழுதி, வெற்றி பெற்றுத் தரங்கம்பாடியில் முனி சீப்பாக வேதநாயகர் நியமிக்கப் பெற்றார். இவருடன் இப்பத விக்கு நியமிக்கப் பெற்றவர்களே சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி யாக மாண்புற்ற முத்துசாமி அவர்களும், திவான் இரகுநாத ராவும் ஆவர். 1872ஆம் ஆண்டில் மயிலாடுதுறையில் ஓய்வுபெறும் வரை நேரிய நீதிபதியாக வேத நாயகர் சீரிய பணியாற்றினார்.

'வரும் வழக்கர் மனத்தை வன் சொற்களால் சுடாமல், மற்றைக் கீழ் உத்தியோகத்தார் வம்புக் கிடங் கொடாமல், தரும தேவதை நியாயத்தலந்தனில் நடிக்க, தப்பு சாட்சிகள் கிடு கிடெனவே துடிக்க, இருமையகல் அநீதியே ஓட்டம் பிடிக்க, இலஞ் சம் வாங்கிகள் வெட்கத்தால் உயிர் மடிக்க வேதநாயகர் பொது நீதி செலுத்திப் புகழ் பெற்றார்.

ஒரு சிக்கலான வழக்கு நீதிபதி வேதநாயகரிடம்தீர்ப்புக்குவந்தது யார் பங்கில் உண்மை இருக்கிறது என்பதைக் கண்டுபிடிக்கத் தீவிர விசாரணை செய்து கொண்டிருந் தார். வழக்கு நடந்து கொண்டி ருக்கும்போது, ஒருநாள் இரவு வாதி நீதிபதியின் வீட்டுக்குச் சென்று அவரைத் தனியாக நேரிற் கண்டு, நிலைமையை விளக்கினான்.

மறுநாள் நீதிமன்றத்திற்கு வேதநாயகர் சென்றதும், இந்த வழக்கைக் குறித்து அவர் வாயி லிருந்து வந்த சொற்கள் இவை :

"இந்த வழக்கில் உண்மையைக் காண்பது உள்ளபடியே எனக்குக் கடினமாகத்தான் இருந்தது. நேற்றிரவு வாதி என் வீட்டுக்கு வந்து, நூறு ரூபாயை இலஞ்ச மாகக் கொடுத்தபோதுதான் எனக்கு உண்மை வெளிப்படை யாக விளங்கியது. ஆகவே, நீதியை எதிர்த்தரப்பிற்கும், மன்னிப்பை வாதிக்கும் அளிக் கிறேன்."

இந்த இடி நீதிமன்றத்தை மட்டுமல்ல; நகரையே பலநாள் நடுங்க வைத்துவிட்டது!

சீர்காழிக் கோவை அரங்கேற்றம் :

தஞ்சைத் தரணியில் தரங்கம் பாடியிலிருந்து சீர்காழிக்கு நீதிபதி வேதநாயகர் மாற்ற லுற்றார். அப்போது மகாவித்து வான் மீனாட்சி சுந்தரனார், சீர்காழிக்கு வந்து தங்கியிருந்து, சீர்காழிக் கோவை என்னும் செந்தமிழ்ச் சிற்றிலக்கிய நூலி யற்றி அரங்கேற்றமும் செய்வித் தார்.

சீர்காழிச் சிவபெருமான் திருக் கோயிலில் நடைபெற்ற இச் சைவமணங் கமழும் நூலின் அரங்கேற்ற முழுவதையும், சமயப் போறைக்குச் சான்றாகிய வேதநாயகர் தாமே முன்னின்று நடத்தி வைத்தார். அரங்கேற்ற நிறைவின் போது, வேதநாயகர் பாடிய சாற்றுக்கவிகளில், அவரது தமிழ்ப்பற்றும், புலவரைப்

போற்றுந் திறனும் நகைச்சுவை உணர்வும் நன்கு புலனாகின்றன.

இச்சாற்றுக் கவியின் ஒரு செய்யுள், சீர்காழியில் கோயில் கொண்டுள்ள சிவபிரானையே விளித்துக் கேட்கும் பான்மையில் அமைந்துள்ளது. 'ஈசரே! விண்ணுலகத்தவரும் மண்ணுலகத்தவரும் உம்மைப் போற்றிப் புகழ்ந்த பல்வேறு பாமாலைகள் இதுவரை உமக்குக் கிடைத்திருக்கலாம். ஆயின் அறிஞர் பெருந்தகையாகிய மீனாட்சி சுந்தரரின் இக்கோவைக்கு அவை யாவும் நிகராகுமா?, நாம் இந்த சீர்காழி வட்டத்தின் நீதிபதி என்பதைத் தாங்கள் அறிவீர்கள். எனவே, நம் முன் உண்மையைச் சொல்ல வேண்டும்' என்று கேட்கும், வேதநாயகரின் சாற்று கவிப் பாடலில் நகைச்சுவையின் ஊற்றுப் பெருக்கினைக் காணலாம்.

''விதிஎதிரில் அரிமுதலோர் புகல் புகலி
ஈசரே! விண்ணோர் மண்ணோர்
துதிபொதிபல பாமாலை பெற்றிருப்பீர்;
மீனாட்சி சுந்தரப்பேர்
மதிமுதியன் கோவையைப் போல் பெற்றீர்கொல்?
இக்காழி வைப்பின் நீதி
அதிபதி நாம் என அறிவீர்;
நம்முன்னஞ்
சத்தியமா அறைகு வீரே!''
(புகலி - சீர்காழி)

நீதி நூல் :

தமிழில் திருக்குறள் முதலாகப் பல்வேறு அறநூல்கள் இருப்பினும் ஆங்கிலேயர் நம் நாட்டை ஆண்ட காலத்தில், ஆங்கில மொழி வாயிலாக அறிந்த அறக் கருத்துகளையும் உள்ளடக்கி, ஒரு விரிவான நீதி நூலை வேதநாயகர் எழுத விழைந்தார்.

1860 ஆம் ஆண்டில், மொத்தம் 600 விருத்தப் பாக்களில், காலத்திற்கேற்ப புதுமைக் கருத்துகளுடன் 44 அதிகாரங்களில் அமைந்த வேதநாயகரின் முதல் நூலாகிய, 'நீதி நூல்' வெளி வந்தது.

மகாவித்துவான் மற்றும் வள்ளலார் முதலிய 56 பெரும் புலவர்களின் சாற்றுக் கவிகளுடன் வெளிவந்துள்ள இந் நூலில், பல்வேறு அறக் கருத்துகளும், ஒவ்வொரு பாடலிலும், சிறுசிறு நிகழ்ச்சிகளைக் கதைப் பாங்கில் தெரிவிக்கும் வகையில், எளிய இனிய தமிழில் இயற்றப் பட்டுள்ளன.

அவற்றுள் ஒரு பாடல் :-

ஓவியக் காட்சி ஒன்றினைக் காண வருமாறு மனைவியை அழைக்கிறான் கணவன். அதற்கு அவள் கூறிய பதிலின் வாயிலாகக் கற்பின் திறம் இமயத்தின் சிகரத்தை எட்டி விட்டதாகப் பாடுகிறார் வேதநாயகர்.

''ஓவியக் கண்காட்சியில் ஆண்களின் சித்திரம் இருக்குமானால், நான் பார்க்க மாட்டேன்! பெண்களின் சித்திரமும் இருக்குமல்லவா? அவற்றை நீங்கள் பார்ப்பதை என் மனம் அனுமதிக்காது!'' என்ற சுவையான வாதத்தில், தமிழ்ப் பண்பாட்டையே வேதநாயகர் படம் பிடித்துக் காட்டுகிறார்.

''ஓவியர் நீள்சுவ ரெழுதும்
ஓவியத் தைக்கண் ணுறுவான்
தேவியை அழைத்திட, 'ஆண்
சித் திரமேல் நான் பாரேன்,
பாவையர் தம் உருவெனில்நீர்
பார்க்க மனம்
பொறே'னென்றாள்.

காவிவிழி மங்கையிவள் கற்பு
வெற்பின்வற் புளதால்''

மயிலாடுதுறைக்கு மாற்றம் :

1860 ஆம் ஆண்டில், மாயூரம் என்று அழைக்கப் பெற்ற மயிலாடுதுறைக்கு நீதிபதி வேதநாயகர் மாற்றப் பெற்றார். அவ்வூரிலேயே சற்றொப்ப முப்பது ஆண்டுகள், வாழ்வின் செம்பாதியைக் கழித்தமையால், அவர் மயிலாடுதுறை வேதநாயகர் என்றே பெயர் நிலைக்கப் பெற்றார்.

இல்வாழ்க்கை :

புதுச்சேரியைச் சார்ந்த மாணிக்கத்தம்மையார் என்ற மங்கை நல்லாரை வேதநாயகர் மணந்திருந்தார். இவர்களுக்கு ஞானப்பிரகாசம், சவரி முத்தம்மாள், இராசாத்தி அம்மையார் என்ற மூன்று மக்கட் செல்வங்கள் தோன்றினர். இவர் தம் ஒரே மகளான ஞானப் பிரகாசத்தின் பேரர்களாகத் திரு. ஆ. ஜான்ஜோசப் (தமிழ்நாடு அரசு ஓய்வு பெற்ற இணைச் செயலாளர்) திரு. வே. ஞா. ச. இருதயநாதன் (பிரதாப முதலியார் சரித்திரம் - நூற்றாண்டு விழாப் பதிப்பாசிரியர்) ஆகியோர் சென்னையில், இன்று நம்மிடையே வாழ்ந்து, வேதநாயகரின் மரபைக் காத்து வருகின்றனர்.

திருவாவடுதுறை ஆதீனத் தொடர்பு :

மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை தம்மை ஆதரித்த திருவாவடுதுறை ஆதீனத் தலைவராகிய மேலகரம் சுப்பிரமணிய தேசிகருக்கு வேதநாயகரை அறிமுகம் செய்து வைத்தார். தமிழ்ச் சுவையில்தோய்ந்து தமிழை வளர்த்த தேசிகர் அவர்கள், சமய வேற்றுமை பாராட்டாது, வேதநாயகருடன் நட்புரிமை பூண்டு பழகி, வந்தமை, அக்காலத்தில் நிகழ்ந்த ஒரு பெரும் புரட்சி என்றே கூறலாம்.

ஒருநாள் : திருவாவடுதுறைக்குச் சென்று, தேசிகரைச் சந்தித்து அளவளாவிய பின்னர், இரட்டை மாட்டு வண்டியில், 'எருதுகள் முன்னே இழுக்க,மனம் பின்னே இழுக்க, மயிலாடுதுறைக்கு வந்து சேர்ந்தார் வேதநாயகர். ஊருக்கு வந்த பின்பும், ஏதோ இனம்புரியாத உணர்வில் சிக்கித் தவித்தார். ''திருவாவடுதுறையிலேயே ஓர் இன்றியமையாத பொருளை விட்டுவிட்டு, நான் மட்டும் தனியாக மயிலாடுதுறைக்குத் திரும்பி விட்டேன். தயவு செய்து அந்தப் பொருளை அனுப்பி உதவி வேண்டும்''என்று வேதநாயகர் எழுதிய ஒரு தனிப் பாடல், கடித இலக்கியத்துள் நிலைபெற்றுவிட்ட பாடலாகும்:

''சூர்வந்துவணங்கு மேன்மைச்
சுப்பிர மணிய தேவே!
நேர்வந்து நின்னைக் கண்டுநேற்
றிராத்திரியே மீண்டேன்;
ஊர்வந்து சேர்ந்தேன்; என்றன்
உளம்வந்து சேரக் காணேன்!
ஆர்வந்து சொலினும் கேளேன்;
அதனைஇங் கனுப்பு வாயே!''

சித்தாந்த சங்கிரகம் :

வேதநாயகர் தமிழார்வமும்' ஆற்றலும் வாய்ந்த நீதிபதியாகப் பணியாற்றித் தாம் பெற்ற அனுபவங்களின் அடிப்படையில் எழுந்த கருத்துகளைப் 'பிரதாப முதலியார் சரித்திரம்' என்னும் புதினத்தில் பொறித்துள்ளார் :

''தமிழ் நியாயவாதிகள்,தமிழில் வாதிக்காமல் இங்கிலீஷில் வாதிக்கிறார்கள். தேசபாஷையுந் தமிழ்;

கோர்ட்டில் வழங்கா நின்ற பாஷையுந் தமிழ்; நியாயாதிபதியும் தமிழர்; வாதிக்கிற வக்கீலுந் தமிழர்; மற்ற வக்கீல்களும், கட்சிக்காரர் முதலியவர்களும் தமிழர்கள். இப்படியாக எல்லோரும் தமிழ் மயமாயிருக்க அந்த வக்கீல்கள் யாருக்குப் பிரீதியார்த்தமாக இங்கிலீஷில் வாதிக்கிறார்கள்?”

அன்னியர் ஆட்சிக் காலத்தில் நுண்ணிய நாட்டுப் பற்றுடன் கேட்கப்பட்ட இக் கேள்விக்கு,

“ஆங்கிலம் ஒன்றே கற்றார்-தங்கள்
ஆவியோடு யாக்கையும் விற்றார்”

என்ற நிலையிலிருந்த தமிழர்கள் என்ன பதில் சொல்லியிருப்பார்கள்?

‘சட்ட நுணுக்கங்களைத் தமிழில் சொன்னதெப்படி?’ என்ற மறு கேள்விக்கும் வேதநாயகரே விடையளிக்கிறார் :

“இங்கிலீஷ் வார்த்தைகளுக்குச் சரியான பிரதிபதங்கள் தமிழில் இல்லை என்று வக்கீல்கள் சொல்வது, அவர்களுடைய தெரியாமையே அல்லாமல் உண்மையல்ல. தமிழ் நூல்களைத் தக்கபடி அவர்கள் ஆராய்ந்தால், பிரதிபதங்கள் அகப்படுவது பிரயாசமா? அப்படித்தான் இரண்டொரு சங்கேத வார்த்தைகளுக்குத் தமிழிலாவது சமஸ்கிருதத்திலாவது பிரதிபதங்கள் அகப்படாத பட்சத்தில், அந்த வார்த்தைகளை மட்டும் இங்கிலீஷில் பிரயோகித்தால் அவர்களை யார் கோபிப்பார்கள்?” என்ற சொன்னதோடு வேதநாயகர் நின்றுவிடவில்லை. பொது மக்கள் எல்லோருக்கும் பயன்படும் வகையில், 1805 இலிருந்து 1861 வரையிலான நீதிமன்றச் சட்டத் தீர்ப்புநுணுக்கங்களைத் தமிழாக்கிக் ‘சித்தாந்த சங்கிரகம்’ என்னும்தலைப்புடைய நூலாக 1862ஆம் ஆண்டில் வெளியிட்டார். (சித்தாந்தம் சட்டம்; சங்கிரகம்- தொகுப்பு). இந்நூலின் ஒரேபடி, வேதநாயகர் வழித் தோன்றல் திரு. வே. ஞா. ச. இருதயநாதன் அவர்களிடம் உள்ளது. அதனைவெளியிட்டால், சட்டத் தமிழின் முன்னோடியும் வேதநாயகரே என்பதனைத் தமிழ் கூறு நல்லுலகம் அறிந்து பாராட்டுதற்கு ஏதுவாகும்.

ஓய்வுக் காலம் :

பதினாறாண்டுகள் நீதிபதியாகப் பணியாற்றிய வேதநாயகர் உடல்நலங்கருதி 1872ஆம் ஆண்டில் ஓய்வு பெற்றார். எனினும் மயிலாடுதுறையில் வாழ்ந்திருந்த மக்கள், அவரை நகர் மன்றத் தலைவராகப் பொறுப்பேற்கச் செய்தனர். அதனாலும், தமிழ் இலக்கியத் தொண்டுகளாலும், மறையும்வரை, ஓய்வறியாப்பணியாற்றிய மாமேதையாக வேதநாயகர் திகழ்ந்தார்.

பிரதாப முதலியார் சரித்திரம்:

1369ஆம் ஆண்டில் வெளிவந்த ‘பெண்கல்வி’ என்ற கட்டுரை நூலில், உரைநடை வளர்ச்சிக்கு உரமூட்டும் உரத்த சிந்தனையை வேதநாயகர் வித்திட்டுள்ளார்.

“காவிய ரூபமாயிருக்கிற இந்தத் தேசத்துக் கிரந்தங்கள், அநேகருக்கு அப்பிரயோசனமாயிருக்கின்றன. சில வித்வான்களுடைய பாடல்களை நாம் நாள் முழுவதும் பார்த்தாலும் அர்த்தம் விளங்கவில்லை. அவர்களுக்குத்தான் பயன் தெரியுமோ தெரியாதோ அதுவும் சந்தேகம். அவர்கள் எந்த தெய்வத்தின்மேல் பாடியிருக்கிறார்களோ அந்தத் தெய்வத்துக்குத்தான் அர்த்தம் தெரியுமோ தெரியாதோ. அந்தத் தெய்வத்தைக் கேட்க வேண்டும். அந்தக் கவிகளைச் சிறந்த வித்துவான்களிடத்தில் காட்டினாலும் அவர்களுக்கும் பொருள் தெரியவில்லை. அந்தப் பாடல்களில் பிரயோகிக்கப்பட்ட அரும்பதங்கள் அகராதியிலும் அகப்படவில்லை. சில நூல்களுக்குச் சிலவித்துவான்கள் செய்திருக்கிற உரைகளும், சில இங்கிலீஷ் புத்தகங்களுக்குச் சிலர் செய்திருக்கிற மொழிபெயர்ப்புகளும் தமிழோ, பிரமலிபியோ அல்லது வேறென்ன பாஷையோவென்று தெரியாமல் பிரமிக்கும்படியாய் இருக்கின்றது!”

இந்நிலை மாறத் தமிழில்எளிய இனிய உரைநடை நூல்கள் பெருக வேண்டுவதன் இன்றியமையாமையை வேதநாயகர் வற்புறுத்தியுள்ளார்.

“இங்கிலீஷ், பிரான்சு முதலிய பாஷைகளைப் போலத் தமிழில் வசன காவியங்கள் இல்லாமலிருப்பது பெருங் குறைவு. வசன காவியங்களால் ஜனங்கள் திருந்த வேண்டுமேயல்லாது, செய்யுட்களைப் படித்துத் திருந்துவது அசாத்தியம் அல்லவா? ஐரோப்பிய பாஷைகளில் வசன காவியங்கள் இல்லாமலிருக்குமானால், அந்தத் தேசங்கள் நாகரிகமும் நற்பாங்கும் அடைந்திருக்கக் கூடுமா?”

வேதநாயகரின் இவ்வினாவுக்கு விடைகாணும் வகையில், தாமே முதன் முதலாகப் ‘பிரதாப முதலியார் சரித்திரம்’ என்னும் புதினத்தை 1876ஆம் ஆண்டில்எழுதி வெளியிட்டார். பிரதாப முதலியார் சரித்திரம், தன் வரலாற்றுப் பாங்கில் எழுதப்பட்டுள்ள சுவையான கற்பனை நெடுங் கதையாகும். இதன் ஆங்கில முன்னுரையில் வேதநாயகர் குறிப்பிடுவன நம் நெஞ்சில் நிறுத்தத்தக்க கருத்துகளாகும்:

“நீதி நூல், பெண்மதிமாலை, சமரசக் கீர்த்தனம் முதலிய ஏற்கனவே வெளிவந்துள்ள எனது நூல்களில் குறிப்பிடப்பட்டிருக்கும் அறநெறிக் கொள்கைகளுக்கு உதாரணங்கள் காட்டவும் இந்த நவீனத்தை எழுதினேன்.

“இந்தக் கதைக்கு நிலைக்களம் தென்னிந்தியா. கதாநாயகன் இப்பக்கத்தவர்; நன்கு கல்வி பயின்றவர்; மகா புத்திசாலி; நகைச்சுவையுடனும் அறிவுச் சுடர் வீசும் வகையிலும் பேச வல்லவர். அவர் தனது பிறப்பு, வளர்ப்பு, பெற்றோர், கல்வி பயின்றது, திருமணம் செய்து கொண்டது போன்ற தன் வாழ்க்கையில் முக்கியமான சம்பவங்களை விவரிக்கிறார். கதையில் இடையிடையே ஹாஸ்ய சம்பவங்களும், தமாஷான பேச்சுகளும் பின்னப்பட்டிருக்கின்றன. அறத்துறை சம்பந்தப்பட்ட கருத்துகளும் இடம் பெற்றிருக்கின்றன.”

பிரதாப முதலியார் சரித்திரம் பழகு தமிழ் நடையழகும், நகைச்சுவைப் பாங்கும் நிறைந்த ஒரு கதைக் களஞ்சியம். நூறாண்டுகளுக்கும் மேலாக, பல்வேறு பதிப்புகளைப் பெற்று, இன்றளவும் ஆர்வத்தோடு படிக்கப்பட்டு, வேதநாயகர் பெயரை நினைவூட்டிக் கொண்டிருக்கிறது.

பிரதாப முதலியாருக்கு அளிக்கப்பட்ட வரவேற்பைக் கண்ட வேதநாயகர், ‘சுகுண சுந்தரி’ என்னும் மற்றோர் குறு நாவலையும் எழுதி, 1887ஆம் ஆண்டில் வெளியிட்டார். குழந்தை மனத்தின் கொடுமை, உடல்நலம் ஓம்பல், நன்மை தீமைகளின்மோதல் முதலிய நல்ல கருத்துகளின் நிகரில் படைப்பாக இன்றளவும் இன்முகங் காட்டிக் கொண்டிருக்கும் ‘சுகுண சுந்தரி’ படித்து மகிழ வேண்டிய பயனுள்ள நூலாகும்.

கன்னிக் கிழவிகளின் கனவுகள்...

செல்வி ரு. மைதிலி
பி. ஏ.,

கண்ணில் உறங்கும் கனவுகள்
மௌனத்தில் விழித்த நினைவுகள்
பணம் படைத்தவன் போடும்
போர்வைக்குள்ளே...இவர்கள்
பொம்மை மனிதர்கள்.
விண்ணுக்கும் மண்ணுக்கும்
இடையில்சிக்கித் தவிக்கும்
உண்மைக் கோபுரங்கள்.

இவர்கள்
வறுமைத் தலைவனின்
வஞ்சக ஆட்சியிலிருந்து
விழித்து எழுவார்கள்
வீர நெஞ்சங்கள்.

வேதனையின் விளிம்பில்
வெந்துக் கொண்டிருக்கும்
கல்யாணமாகா
கன்னிக் கிழவிகளின்
முகாரி ராகங்கள்
முடிவுக்குள் வந்துவிடும்.

வழக்குகளை மொழிந்திடும்
வார்த்தையில்லா உலகில்
ஊமைகளாய் ஆன...
காதல் கவிக்குயில்கள்
இனி கானம் பாடும்
வானம்பாடிகளே,

பண்ணில் பாட்டிசைக்கும்
சுரும்புகள்
இனி மலாப் படுக்கையில்
பவனி வரும்.
சோக அரண்மனையில்
தோல்வி சரித்திரங்களை
இனி யாரும்
படிக்கப் போவதில்லை.

உண்மைகள் உறங்காது...
நினைவுகள் நீங்காது...
நிமிர்த்த மலையைவிட
படர்ந்த எண்ண அலைகள்
மெல்ல மெல்லப் பறக்கும்
அவை எழுத்தில் பிறக்க
எண்ணிலாக் கனவுகள்
கண்ணில் உறங்கும்.

(15-ம் பக்கத் தொடர்ச்சி)

இடையிலே தோழர் ம. பொ சிவஞான கிராமணியார் ஒரு தீர்மானம் கொண்டுவந்தார்.

"பல பத்திரிகை முதலாளிகள் தங்கள் பத்திரிகையில் ஆசிரியராகத் தம்மையே போட்டுக்கொண்டு, ஆசிரிய வேலைகளை வேறொரு எழுத்தாளரிடம் கொடுத்துவிடுகிறார்கள். இதனால் எழுத்தாளரின் உரிமை பறிக்கப் படுவதோடு, அவன் பேனாக் கூலியாகவும் கொண்டுவரப்படுகிறான். இந்தப் பகிரங்க மோசடியை இந்த மாநாடு கண்டிக்கிறது."

இதைத் தோழர் (நாரதர்) டி. ஸ்ரீனிவாச ராவ் எதிர்த்தார். அதற்கு அவர் சொன்ன காரணம்:—

'இதை நான் எதிர்க்கிறேன். எங்கள் முதலாளி, பத்திரிகையில் தன் பெயரைப் போட்டுக்கொண்டாலும்,எனக்குப் பரிபூரணமான எழுத்து சுதந்திரம் கொடுத்திருக்கிறார். இந்த வியவகாரம் எழுத்தாளனின் சொந்த வியவகாரம். இது மாநாட்டில் தீர்மானமாக வேண்டிய அவசியமில்லை!'

இதை நண்பர் முத்துசாமி (நவயுவன்) ஆதரித்தார். "எப்படிச் செய்தாலும் எனக்குச் சம்மதம்" என்று கையை விரித்தார் தோழர்,நாரணதுரைக்கண்ணன்! பாவம், அப்பிராணி! (ஒரு விஷயம்; இவர்கள் மூவரும் துகிலுரியப்பட்டவர்கள்! அதாவது உரிமை பறிக்கப்பட்டவர்கள்.)

நாரதர் சீனிவாச ராவ், 'இதை தீர்மானமாகக் கொண்டுவரக் கூடாது' என்று பிடிவாதமாக நின்றார்.

தோழர், சிவஞான கிராமணியார் எழுந்தார்.

"இழிந்த இனத்தின் இயற்குணம்" என்றார்!

'இனத்தைப் பற்றிப் பேசக் கூடாது' என்று ஆத்திரமாகக் கத்தினார் ராவுஜி.

கிராமணியார், "மானத்தை விற்று உயிர் வாழ விரும்பும் சிலர் எழுத்தாளர்களிடையே இருக்கின்றார்கள் [என்பதை இப்பொழுதுதான் தெரிந்து கெண்டேன்! இனி இந்தத் தீர்மானத்தைக் கௌரவமாக வாபஸ் வாங்கிக் கொள்ளுகிறேன்" என்றார்!

சபையில் ஒரே கைதட்டல்.

பின்னர் ஒருவழியாக விஷயாலோசனைக் கமிட்டி முடிந்தது.

மறுநாள் காலை; தீர்மானங்கள் பிரேரேபிக்கப்பட்டு,ஆமோதித்து எதிர்த்து, சிதைக்கப்பட்டு, ஒரு வழியாக நிறைவேறின.

அதிலே முக்கியமாக, 'தமிழரசு' பற்றிக் கிராமணியார் கொண்டு வந்த தீர்மானத்தையும் படவசன எழுத்தாளர், புராணப் படங்களுக்கு வசனம் எழுதுவது பற்றி தோழர், கா.மு.ஷெரீப் கொண்டு வந்த தீர்மானத்தையும் தை முதல் தமிழ் (திருவள்ளுவர்) ஆண்டு வழக்கத்துக்குக் கொண்டு வருவது பற்றி சின்னமனூர்த் தோழர் ;கொண்டு வந்த தீர்மானத்தையும் குறிப்பிடலாம்.

அடுத்த மாநாட்டை மூன்று ஊருக்கு அழைத்தார்கள். அதிலே தஞ்சைக்காரர்கள் கௌரவமாக ஆதியிலேயே வாபஸ் வாங்கிக் கொண்டார்கள். திருச்சிக்காரர்கள், "எங்களூருக்கு வந்தால் மலைக் கோட்டையைப் பார்க்கலாம்!" என்று பயங்காட்டினார்கள்.

பின்னர். தோழர் ஜீவானந்தம் நாஞ்சில் நாட்டின் சார்பாக வந்தார்.

"எங்களூரிலே, ஆகா! அந்தக் கன்னியின் எழிலைக் காண, கன

கள்" இரண்டு போதாது. தமிழ்நாட்டின் ஒரு எல்லையான அந்தக் கன்னியாகுமரி எழுத்தாளர்களை, வாருங்கள், எனக் கூவுகிறது!" என்று அபிநயத்தோடு அழைத்தார்.

திருச்சிக்காரர்கள், "தோழர், ஜீவானந்தம் சொல்வதை நாங்கள் மனப்பூர்வமாக ஆமோதிக்கிறோம்" என்று கௌரவமாக வாபசானார்கள்.

"யாராவது போட்டிக்குவந்து, அவர்கள் ஊருக்கு அழைக்கமாட்டார்களா?" என்று ஏங்கி நின்றவர்கள் போல் விட்டுக் கொடுத்தார்கள்!

"திருச்சி தோழர்களே! உங்களூர்ப் புழுதியில் எழுத்தாளர்களின் புனிதமான காலடி படாது!

அதன்பின், தோழர் டி.எஸ். சொக்கலிங்கம் எழுத்தாளர்களுக்கு 'தேநீர் விருந்து' அளித்தார்

ஒரு வழியாக மாநாடு முடிந்தது!

காதலனை விட்டுப்பிரியும் காதலி போல ஒவ்வொருவரும் கட்டித் தழுவிப் பிரியா விடை பெற்றபோது என் கண்களில் நீர் துளிர்த்தது!

குறிப்பாக :

மாநாட்டை நாடகக் கொட்டகையில் கூட்டியது பெருந்தவறு. தோழர் நாரண. துரைக்கண்ணன் இதைப் பெரிய குற்றமாகக் கருதாவிட்டாலும் என் போன்றவர்கள் இதை இமாலயத் தவறு என்றுதான் கூறுவார்கள். இரண்டாம் நாள் மாலைக் கூட்டத்திற்கு தோழர் "தமிழ் ஒளி" வந்தார். வரும்பொழுது வெளியில்—வாசலில் நின்ற ஒருவன், "டேய்! நில்லடா!" என்றான். அப்பொழுதுதான் நானும் வந்து கொண்டிருந்தேன். தோழரின் சட்டையைப் பிடிக்க ஆரம்பித்தான், அந்தக் கூத்துக் கொட்டகைக் காவல்காரன்!

நிர்வாகிகளின் முதல்தர முட்டாள்தனம் என்றுதான் இதைச் சொல்லுவேன். ஜம்பமாக "பைலை"க் கையில் தூக்கிக் கொண்டு மேடைமீது உட்கார்ந்துவிட்டால் வேலை முடிந்துவிடும் என்று நினைத்தார்கள். போலிருக்கிறது! ஒரு "தமிழ் ஒளி"யை அவமதித்து விட்டதற்காக நான் வருந்தவில்லை. "எழுத்தாள வர்க்கம் கூத்தாடிகளிலும் கேவலமாக எண்ணப்படுகிறதே" என்றுதான் உள்ளம் நைகிறேன்.

தவிர, கால வித்யாசத்தால் பெயர் பெற்றுவிட்டமாநாட்டை மதியாதிருந்த எழுத்தாள நண்பர்கள், மாநாட்டின் சாதனையைப்பற்றிப் பேசிச் சிரிக்க இடம் கொடாமல், தீர்மானங்களைச் செயலில் கொண்டுவர அரும்பாடுபட வேண்டுமென்று சம்பந்தப்பட்ட குழுவினரைக் கேட்டுக் கொள்கிறேன்.

எழுதுகோலைக் கரம்பிடித்து
எழுந்துவிட்டதொண்டர்காள்!
ஈடிலா இலக்கியங்கள் இனிது
செய்ய வருகுவீர்!
பழுதுபட்டுப் பிறர்நகைக்கப்
பதறுகின்ற கோழைகள்
படையெடுத்து நடைமுடுக்கப்
பண்ணவேண்டும் தமிழிலே!
— கவி. குயிலன்

குடைநிழலில் அரசரேனும்
மன்னரேனும்
கொள்கைக்குப் போராட அஞ்ச
மாட்டோம்!
— கவி. தமிழ்ஒளி!
—தாய்நாடு

சிறுகதை

வெறி!

சேலம் சக்தி

'இன்றைக்கு கண்டிப்பாக வேலை கிடைத்தே ஆகவேண்டும்! கிடைக்கும்!' என்று தீர்மானித்துக்கொண்டு அமர்ந்திருந்த மரபெஞ்சில் இருந்து ஆயாசமாக பெருமூச்சு விட்டுக் கொண்டு சுவரில் சாய்ந்தான் துரை... பேருக்குப் பின்னால் டி.இ.இ.இ. என்று நான்கெழுத்து பொறியியல் பட்டம்!

மணி பத்தரைக்குமேல் ஆகிவிட்டது! 'செயற்பொறியாளர் (மின்னியல் பிரிவு) பொ.ப.து.' என்ற பிரமாண்டமான பெயர்ப் பலகையை தாங்கிய அந்த அலுவலகத்தில் இருந்த எண்பத்திநான்கு சேர்கள், அறுபத்திமூன்று பெஞ்சுகளில் வெறும் இருபத்திமூன்று மட்டும்தான் அதுவரைக்கும் நிரம்பி இருந்தது!

ஆனால் இன்னும் வேலை ஆரம்பித்துவிடவில்லை. அதை விட முக்கியமான வேலைகள் நடந்து கொண்டிருந்தன. இன்னும் வராத டைப்பிஸ்ட் எண்மூன்றான இரத்னாவுக்கும் தலைமை எழுத்தர் நாற்பத்திரண்டு வயசான இராமநாதனுக்கும் இருந்த 'விசேடமான' அப்பா மகள் உறவைப் பற்றி ஒரு உயர கொண்டைக்காரி ஒரு வட்ட மேசை மாநாடு கூட்டிப் பேசிக் கொண்டிருந்தாள்!

'தமிழ்நாடு அரசு' என்று கொட்டை எழுத்தில் அச்சிட்டிருந்த காலண்டரில் அநியாயத்திற்கு மூன்று மாதங்கள் பெரிசும் சிறுசுமாக ஒரே பக்கத்தில் அச்சிடப்பட்டிருந்தது. அதற்கு நேர் கீழே இருந்த ஒரு காலுடைந்த மரபெஞ்சில் கோந்து தடவித் தடவி மேடுபள்ளமாக இருந்தது. அதற்கு அருகில் ஒரு தராசும் எடைக் கற்களும் வைக்கப்பட்டிருந்தன! அதற்கு அருகில் இருந்த மேசையின் மேல் 'டெஸ்பாட்சிங் கிளார்க்' என்று ஆங்கிலத்தில் எழுதிய அட்டை வைக்கப்பட்டிருந்தது. அதில் நடுநடுவே இரண்டு மூன்று எழுத்துக்களைக் காணவில்லை,

வாய் நிறைய வெற்றிலையைக் கொதப்பிக் கொண்டு வெள்ளை சர்ட், பேண்டில் காலை விந்தி விந்திக் கொண்டு வந்த ஒருவன் நேராக துரையிடம் வந்தான்.

"இன்னாபா... இன்னாவேணும்!"

"ஐயா... என்ஜினியரை பார்க்கணும்" தலையைச் சொரிந்து கொண்டே தயக்கமாக எழுந்து நின்று சொன்னான், துரை.

"அடடடா! ஐயா இன்னிக்கு மேட்டூருக்கு கேம்ப் போயினுக்கீறாரேபா! வரமாட்டாரே!"

"இல்லீங்க! ஐயா இன்னைக்கு என்னை வந்து பார்க்கச் சொன்னாருங்க... இன்னையிலிருந்து டெக்னிகல் அஸிட்டெண்ட் டெம்பரவரி போஸ்ட்க்கு போடறேன்னு சொல்லி இருக்காருங்க"

"அப்படியா! அப்ப குந்திகினு கிடபா! வந்தாருன்னா அனுப்பறேன்" என்று சொல்லிவிட்டு

திரும்பியவனைப் புதிதாகப் படியேறி வந்து கொண்டிருந்தவர்.

"என்ன பாலன்? காலையில் 'வரவா'?'' என்று கிண்டலாகக் கேட்க துரை புரியாமல் விழித்தான்.

"அது இல்லீங்க சார்! தம்பி வேலைக்கினு வந்திருக்கு! நம்ப இஞ்சினியர்ஐயா ரொம்ப ஸாப்ட் இல்லீங்களா? கண்டிப்பா போட்டுக் கொடுப்பாரு'' என்று சொல்லிவிட்டு கறையேறிய காவிப்பற்கள் தெரியச் சிரித்தான்.

"தம்பி உன்னை... எங்கேயோ பார்த்த மாதிரி இருக்கே?'' புதிதாக வந்தவர் துரையைப் பார்த்துக் கேட்டார்.

"ஐயா... போன வருஷம் இங்கிருந்து ரிடையர்ட் ஆனாரே பியூன் பாலசுந்தரம், அவர் பிள்ளை சார் நான்.''

"அடடே...பாலசுந்தரத்தோட பிள்ளையா! என்கிட்ட கூட சொல்லி இருக்கார் உங்கப்பா! நல்ல மனுஷன்... ஆபீசையே கலகலப்பா வச்சுகிட்டிருந்தார்...'' என்று அவர் தொடரும்முன்னே பாலன் குறுக்கிட்டான்.

"அட்டே! நம்ம பாலசுந்தரம் பிள்ளையா நீ! இன்னாபா முந்தியே சொல்லியிருக்கக் கூடாது? மனுஷன்னா அவர் மனுஷன்யா? அஞ்சு பைசா லஞ்சம்,அன்பளிப்பு ஏதும் வாங்கமாட்டார்யா? ராசா நீ குந்திக்கினு இரு... ஐயா வந்ததும் நான் பர்ஸ்ட் உன்னை உள்ளார அனுப்பறேன்'':

இருவரும் போய்விட்டார்கள்.

பீண்டும் 'மின் செயற்பொறியாளர் பொ.ப.து.' என்று ஆங்கிலத்தில் எழுதியிருந்த கதவைப் பார்த்தபடியே சுவரில் சாய்ந்து கொண்டு கண்களை முடிக் கொண்ட துரைக்கு, 'ப்ளாஷ் பேக்'குகளும் பசியும் வந்தது!

கோயம்புத்தூரில் பாலிடெக்னிக்கில் கடைசி வருடம் படித்துக் கொண்டிருந்த போது பாலசுந்தரம் ஒய்வு பெற்றார்.

பென்ஷனில் துரையின் இறுதி வருடப் படிப்பைச் சமாளிக்க முடியாமல் ஏகமாக கடன்பட்டார். உடன் பிறந்தவர்கள் யாரும் உதவ முன்வராமல் போகவே அதையே சவாலாக எடுத்துக் கொண்டு படித்தான் துரை. சக மாணவர்கள் சுற்றுலா போனபோது இவன் கல்லூரியை புத்தகங்களுடன் சுற்றி வந்தான். எல்லாம் கல்லூரி லைப்ரரியில் எடுத்தவை. படித்தான்... படித்தான்... வெறியாகப் படித்தான். தொண்ணூறு சதவீத மதிப்பெண்களுடன் கல்லூரியில் முதன்மையாகத் தேறிய போது அவனைப் 'புத்தகப் புழு' என்று திட்டியவர்கள் கூட பாராட்டினார்கள். மேடை போட்டு பாராட்டினார்கள். அதோடு சரி—

எம்ப்ளாய்மெண்ட் எக்சேஞ்ஜ் பழக்கமான அளவுக்கு எம். எல். ஏ.வோ, எம்.பி.யோ, வட்டமோ, கிளையோ பழக்கமாகாததால் ஒன்னரை வருஷமாக இன்னும் வேலை கிடைக்கவில்லை. சேலத்தில் இருந்த தனியார் கம்பெனிகள், கடைகள் ஒன்றுவிடாமல் ஏறி இறங்கியாகி விட்டது.

"யோவ்... ஒரு நாளைக்கு பத்துப்பேர் 'டிப்ளமோ ஹோல்டர்னு' கையில் காகிதத்தைத் தூக்கிட்டு வரானுங்க...எவனுக்கய்யா வேலை கொடுக்கறது?இங்கென்ன மரத்துலயா வேலை காய்ச்சித் தொங்குது... போய் மூட்டை தூக்குங்கடா'' ஒரு எலெக்ட்ரிகல் காண்ட்ராக்டரிடம் இப்படிக்கூடத் திட்டு வாங்கிவிட்டான்.

கடைசியில்தான் அவன் அப்பா பணி புரிந்த அலுவலகத்திலேயே மூன்று மாத தற்காலிக வேலைக்கு ஒரு இடம் காலியாக இருக்கிறது என்று கேள்விப்பட்டான். அதை அவன் அப்பாவிடம் சொல்லி ஒரு வார்த்தை சொல்லச் சொன்னதற்கு;

"இதோ பாருப்பா, உன் மதிப்பெண்ணுக்கும், உழைப்புக்கும், திறமைக்கும் கிடைக்காத வேலை என் சிபாரிசுக்குதான் கிடைக்கும்னா, இந்த வேலை உனக்கு தேவையே இல்லை'' என்று ஒரு வார்த்தையில் சொல்லிவிட்டார். ஆனால் நாளாக நாளாக மோசமான குடும்பச் சூழ்நிலை, கடன்காரர்களின் நெருக்குதல், சிந்தனைக்குமேல் அம்மாவின் நச்சரிப்பில் கொஞ்சம் இறங்கிவந்தார்.

"ஒரே ஒரு தடவை சூப்ரெண்டிங் இன்ஜினியர் கிட்ட சொல்றேன். அதுக்கு மேல என்னைத் தொந்திரவு பண்ணக் கூடாது.''

மேற்பார்வைப் பொறியாளரைச் சந்திக்கப் போனபோதுதான் அப்பாவின்மரியாதையைப் பற்றி துரை புரிந்துகொண்டான் அவரை சிபாரிசுக்கு வரச்சொல்லி அவர் மதிப்பைக் குறைத்துவிட்டதற்காக வெட்கப்பட்டான்.

மேற்பார்வைப் பொறியாளர், அவரைப் பார்த்ததும் உட்கார்ந்த இடத்திலிருந்து எழுந்து வரவேற்றார்.

"வாங்க பாலசுந்தரம்! என்ன இவ்வளவு தூரம் வந்திருக்கீங்க— வாங்க... உட்காருங்க... பையன் யாரு, உங்க பையனா?...'' என்று கேட்டுக் கொண்டே அழைப்பு மணியை அழுத்தி பியூனை அழைத்து காபி வாங்கி வரச் சொன்னார்.

"என் பையன்தான் சார்... டிப்ளமோ...படிச்சிருக்கான் எலெக்ட்ரிகல் புவிஷன்ல... ஏதோ டெம்பரவரி... போஸ்ட்...'' அதற்கு மேல் பாலசுந்தரத்தால் பேச முடியவில்லை. முகமெல்லாம் வியர்த்துவிட்டது.

அதற்குள் அவரே புரிந்து கொண்டார்.

"அட... இதுக்கேன் இவ்வளவு தயங்கறீங்க? உங்க பையனுக்கு இல்லாத வேலை யாருக்கு? நான் எக்ஸிக்யூடிவ் எஞ்சினியருக்கு போன்ல சொல்லிடறேன். பையனைப் போய்ப் பார்க்கச் சொல்லுங்க'' என்றவர் உடனே போன் செய்து சொன்னார்.

போப்பா! போய் பார்த்துட்டு வா...'' என்றார் போனை வைத்துக்கொண்டே.

அந்தக் கட்டிடத்தின் பின்னாலேயே இருந்த செயற்பொறியாளர் அலுவலகத்தில் போய், பொறியாளரைப் பார்த்தான்.

"அடுத்த மாசம் ஒண்ணாந் தேதி சர்டிபிகேட் எல்லாம் எடுத்துட்டு வாப்பா. வெரிஃபை பண்ணிட்டு ஆர்டர் போட்டுக் கொடுத்துடறேன்'' என்றார் அவர்.

அதன்படி ஒண்ணாந் தேதி, இன்று வந்திருந்தான் துரை.

பசி வயிற்றைக் குடைந்தது. ஆனால் சாப்பிடப் போனால் அந்த நேரத்தில் என்ஜினியர் வந்துவிட்டு போய்விட்டால் ஒரு அச்சம் மனசுக்குள் ஊடுருவியது.

காலையில் குடித்துவிட்டு வந்த கஞ்சி வயிற்றுக்குள் எப்போதோ கரைந்து விட்டேன் என்கிற மாதிரி ஓசை எழுப்பியது.

மணி மூன்றரை!

பசிக்களைப்பு முகத்தில் வழிந்துகொண்டிருந்தது. முகத்தில் ஒரு முப்பது வயது முதுமை கூடி

இருந்தது, கண்களைச் சுற்றி களைப்பைக் காட்டுகிற கரு வளையங்கள் விழுந்திருந்தன.

"எக்ஸ்க்யூஸ் மீ.." குரல்கேட்டு நிமிர்ந்தான் துரை.

ஒரு நாற்பது வயது மதிக்கத் தக்கவர், கம்பீரமாக நின்றிருந் தார். தலையைப் படிய வாரி இருந்தார். ஒன்றிரண்டு நரைமுடி கள் அவரது வயதுக்கு தகுந்த கம் பீரத்தைக் கொடுத்தது. அவருக் குப் பின்னால் ஒரு இனிக்கும் இரு பது நின்றிருந்தது. கூந்தல் இடை யை மீறி பின்னலாகக் கீழறங்கி இருந்தது. பொய் போல தெரிய வில்லை. கம்பீரத்தை விட நிற மாக இருந்தாள். கம்பீரத்தின் சாயல் முகத்தில் தெரிந்தது.மகள் போலும்.

"இன்ஜினியர் இருக்காரா?"

"மேட்டூர் கேம்ப் போயிருக்கா ராம். நானும் அவருக்காகத்தான் காலையிலிருந்து 'வெயிட்' பண் ணிக்கிட்டிருக்கேன் சார்."

"ஓ! அவர் என்னோட பெஸ்ட் ஃப்பிரெண்ட்" என்று சொல்லிக் கொண்டிருக்கும் போதே... இன் ஜினியர் ரவீந்திரன் வந்தார்.

"ஹலோ சண்முகராஜ், எப்ப வந்தீங்க?"

"இப்பதான், ஜஸ்ட் டென் மினிட்ஸ்..."

"கம்...கம். யாரு பெண்ணா?" என்று கேட்டுக்கொண்டே தள்ளு கதவைத் தள்ளிக் கொண்டே போனார் ரவீந்திரன். சண்முக ராஜும் அவர் பெண்ணும் பின் னாலேயே உள்ளே போக...குழல் விளக்கின் வெளிச்சமும்; 'உர்ர்' ரென்று ஏர்கண்டிஷனரின் ஒலி யும் உடனடியாக வெளியே வர... அதுவரைத் தூங்கி வழிந்து கொண்டிருந்த அலுவலகம் சுறு சுறுப்பாக இயங்க ஆரம்பித்தது

துரையின் மனசு படபட வென்று அடித்துக் கொண்டிருந் தது. நின்று கொண்டிருந்த அவ னையோ, பவ்யமான அவன் வணக்கத்தையோ பார்த்தும் பார்க்காத மாதிரி ரவீந்திரன் அறைக்குள் போனதுதான் அவ னைக் கலக்கியிருந்தது.

உள்ளே போய்விட்டு வந்த பாலனை ஏக்கத்துடன் பார்த் தான் துரை.

"ஐயா கிட்ட சொல்லிக்கி றேன். இந்த ஆர்டரை டைப் அடிச்சுகினு வா. அப்பாலே பாக்க லாம்னு சொல்லினுகீறார். இருப்பா கண்டிப்பா வேலை போட்டுக் கொடுப்பார்" என்று சொல்லி விட்டுப் போனான் பாலன்.

அடுத்த அரைமணி நேரம் பட படப்பாகக்கழிந்தது.இந்த வினாடி அழைப்பார்கள், அந்த வினாடி அழைப்பார்கள் என்று அறைக் கதவையே பார்த்துக் கொண் டிருந்தான்.

விரல்கள் லேசாக நடுங்கின... பசி ஞாபக அடுக்கில் இருந்து மறதி அடுக்கிற்கு மாற்றப்பட்டி ருந்தது. அவன் அவஸ்தையைப் பார்க்கச் சகியாமல் மீண்டும் பாலன் உள்ளே போய் வந்தான்.

"ஐயா கூப்பிடறாரு..." அவன் மேலே பேசுவதற்குள் உள்ளே பாய்ந்தான் துரை.

"ஆனால் அவனை கண்டு கொள்ளாமல் பேசிக்கொண்டிருந் தார் ரவீந்திரன்.

"அதான் டெம்பரவரி போஸ் டுக்கு ஆர்டர் போட்டுக் கொடுத் துட்டேனே சண்முகம்? இரண்டு வருஷம் தொடர்ச்சியான சர்வீஸ் இருந்தாத்தான் பர்மனெண்ட் பண்ண முடியும். இல்லைன்னா ஒரு மூணு மாசம் கழிச்சு எம்ப் ளாய்மெண்டுக்கு ஒரு கால்ஃப்பார்

அனுப்பி நம்ப பொண்ணை செலக்ட் பண்ணிட்டா போறது. கவர்ன்மென்டை என்ன மாதிரி இருக்கிற உயரதிகாரிகள் ஏமாத் தறது ரொம்பச் சுலபம்..."

"சரி ரவி... அந்தப் பையன் நிக்கறான் பாரு" சண்முகராஜ் சொல்ல, அவர் பெண் தலையை குனிந்து கொண்டு லேசாகச் சிரித் தாள்.

"ஆ! என்னப்பா... என்ன வேணும்?" இப்பொழுதுதான் அவனைப் பார்ப்பது போல் அவன் பக்கம் திரும்பினார் ரவீந் திரன்.

"சார்.. டெக்னிகல் அஸிஸ் டென்ட் டெம்பரவரி வேகன்சி சம்பந்தமா... இன்னிக்கு ஆர்டர் போட்டுத் தர்றதா சொன்னீங்க"

"ஓ! அதா...ஐயம் ஸாரி தம்பி! இப்பதான் இவங்களுக்கு ஆர்டர் போட்டேன். நீ லேட்டா வந் திருக்கியே."

"சார்! நான் காலையிலிருந்து உட்கார்ந்துட்டிருக்கேன் சார்... சார் ப்ளீஸ் சார்...சாப்பிடக்கூட போகலை சார்... நீங்க வேலை கொடுக்கலைன்னா நான் இனி மேல் வேலை கேட்க சேலத்திலே எந்த கம்பெனியும் இல்ல சார்... சார்... ப்ளீஸ் சார்..." தன்மா னத்தை விட்டுக் கெஞ்ச ஆரம் பித்தான் துரை.

"அதுக்கு நான் என்னப்பா பண்ணமுடியும்? மிஸ்டர் சண்முக ராஜ் என்னோட பெஸ்ட் ஃப்ரெண்ட் அவர் பொண்ணுக்கு வேலை வேணும்னு முதல் தட வையாக் கேக்கறாரு... ஒரே ஒரு வேகன்சி... நான் என்ன பண்றது ...ஆர்டர் போட்டுக் கையெழுத் துக்கூடப் போட்டுக் கொடுத் தாச்சு... இனி ஒண்ணும் பண்ண முடியாது."

"சார் இருபத்தாறு வருஷம் உழைச்ச எங்கப்பாவுக்காக எனக்கு ஒரு வேலை, அதுவும் மூணு மாசம் டெம்பரவரி போஸ்ட் போட்டுத் தாங்க சார் ...ப்ளீஸ் சார்..."

"உங்கப்பா செஞ்ச வேலைக் குப் பிச்சைக் கேக்கறியா? அதுக் குத்தான் கவர்ன்மெண்ட்ல இருந்து பென்சன் தர்றாங்களே, அப்புறமென்ன...?"

சரேலென தன்மானம் தாக்கப் பட்டு திடுக்கிட்டான் துரை.மேற் பார்வைப் பொறியாளரின் அலு வலகத்தில் அப்பாவுக்கு கிடைத்த மரியாதையைக் குழிதோண்டிப் புதைத்து விட்டதாக உணர்ந் தான்.

"நோ? நீங்க பிச்சைப் போட வேண்டாம். உங்களை மாதிரி பத்து இன்ஜினியர்களுக்கு இரண்டு வருஷத்தில் நான் பிச் சைப் போடறேன்... ப்ளீஸ் இனி மேலாவது கவர்ன்மெண்ட்ல கை நீட்டி வாங்கற சம்பளத்துக்கு ஒழுக்கமா வேலை செய்யுங்க... குட்பை" கம்பீரமாகக் கதவைத் திறந்து கொண்டு வெளியேறும் துரையைப் பார்த்து சண்முகராஜ் யோசனையுடன் ரவீந்திரனிடம் கேட்டார்...

"ஏன் சார், அவனுக்கே வேலை யைக் கொடுத்திருக்கலாமே? ரொம் ஃபுவர் பெல்லோவா இருப்பான் போலிருக்கே...?"

"நோ, சண்முகராஜ்! நம்பளை மாதிரி ஹை சொசைட்டி பியூ பிள்க்கு தன்மானத்தை உசுப் பினா கோபம்தான் வரும். அடி ஆளை 'செட்' பண்ணி காரண மானவங்களை உதைக்கத்தான் சொல்லும்... ஆனால், ஃபுவர் பெல்லோஸ் தன்மானத்தை உசுப் பினா வெறி வரும். ஒண்ணு நேரி டையா உதைப்பான்... இல்ல காரணமான காரியத்தை சாதிச் சுக் காட்டுவான். அதுவும் இவங்க அப்பா பாலசுந்தரத்துக்கு எஸ்.இ ஆபீஸ்லேயே பயங்கர மரியாதை அந்த அளவு மானத்து மேல பற் றிருக்கிறவன் கண்டிப்பா பத்து இன்ஜினியர்ஸுக்கு வேலை தர்ற அளவு உயர்வான். என் கணக்கு தப்பா போகாதுங்கற நம்பிக்கை எனக்கு இருக்கு" உறுதியோடு சொன்னார் ரவீந்திரன். ★

என்னுயிர்நீ என்னுயிர்க்கோர் உயிரும் நீஎன்
இன்னுயிர்க்குத் துணைவனீ என்னை ஈன்ற
அன்னைநீ என்னுடைய அப்ப னீஎன்
அரும்பொருள்நீ என்னிதயத் தன்பு நீஎன்
நன்னெறிநீ எனக்குரிய உறவு நீஎன்
நற்குருநீ எனைக்கலந்த நட்பு நீஎன்
தன்னுடைய வாழ்வுநீ என்னைக் காக்குந்
தலைவன்நீ கண்மூன்று தழைத்த தேவே.

— திருஅருட்பிரகாச வள்ளலார்

விளம்பர உதவி :

ஏ. பி. டி. பார்சல் சர்வீஸ்

10 / 13-15, காளிங்கராயன் வீதி,
ராம் நகர்,
கோயமுத்தூர் - 611 009.

193681